பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!
தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11,
தொலைபேசி: 22839 — 34238

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4571 1984 ஜூன் 1 வெள்ளிக்கிழமை ★ ★ ★ தினபதி

அம்பிகா!
உங்களை
அழைக்கின்றுள்!
நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
Ambiga
Jewellers
77, SEA STREET,
COLOMBO-11.
PHONE: 22839 — 34238.

# தேசிய பாதுகாப்பு சட்டம் வருகிறது

## அவசரகால விதிகளை உள்ளடக்கி இருக்கும்

### கைது செய்தல், தடுத்துவைத்தல், மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்கு ஏற்பாடு

—லலித் அழகக்கூன்—

கொழும்பு, ஜூன் 1

தேசிய பாதுகாப்பு சட்டம் ஒன்று, அரசாங்கத்தால் விரைவில் கொண்டு வரப்பட இருக்கிறது. இந்தச் சட்டத்தில் சில முக்கியமான, அவசரகாலச் சட்ட விதிகள் உள்ளடக்கப்படும்.

ஆட்களைக் கைதுசெய்தல், தடுப்புக் காவலில் வைத்தல், நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல் ஆகிய தேவைகளுக்காகவே அவசர காலச் சட்ட விதிகள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

அவசரகால நிலை நீக்கப்பட்டதன் பின் எழக்கூடிய சூழ்நிலைகளை முன்னிட்டே, தேசிய பாதுகாப்புச் சட்டம் இயற்றப்படவிருக்கிறது.

யாது என சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தில் உரையாற்றும் போது, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும் அறிவித்திருந்தார்.

## சோமண்ணை



கடத்துறது சின்ன வெங்காயமாக இருந்தாலும் கண் கரிக்காமல் இருக்க வேணும் பாருங்கோ-

## இளைஞர் சடலம்

கொழும்பு, ஜூன் 1

உடுவிலைச் சேர்ந்த இராம லிங்கம் பால்சிங்கம் (2...

## ஜப்பானுடன் விமான சேவை ஒப்பந்தம் இன்று கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 1

ஜப்பானுடன் விமான சேவை நடத்துவதற்கான ஓர் ஒப்பந்தம் இன்று பாதுகாப்பு அமைச்சில் கைச்சாத்திடப்படும்.

ஜப்பான் சார்பில் இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவர் திரு. ஹிரோஷி ஒட்டாகாவும், இலங்கை சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகலையும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர்.

(த-7)

## தமிழீழ முத்திரை

### யாழ். தேவாலய பகுதியில்

### மத குருமார் விசாரணையில்

கொழும்பு, ஜூன் 1

யாழ்ப்பாணத்தில் தேவாலயம் ஒன்றையும் அதனோடு சேர்ந்த வீடு ஒன்றையும் சோதனையிட்ட ஆயுதப்படையினர் அங்கிருந்து "தமிழ் ஈழம் முத்திரை"களையும், ஒரு தொகை பிரசுரங்களையும் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக தேவாலயத்தில் வசிக்கும் மத குருமார் இருவர் விசாரிக்கப்படுவர் எனத் தெரிய வருகிறது.

நுமர் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட தேவாலயத்துக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அடிக்கடி சென்று வந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-11)

# காங்கேசன் வங்கியில் ரூ. 2 லட்சம் கொள்ளை

## கடத்தப்பட்ட கார் உரிமையாளரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 31

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வளவுக்குள் இருக்கும் இலங்கை வங்கிக் கிளையில் 2 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

இன்று வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் இக் கொள்ளை நடத்தப்பட்...

காரில் ஏறிக் கொண்டனர். சிறிது தூரம் சென்றபின், மிருக வைத்தியரையும் சாரதியையும் இறக்கி விட்டனர்.

அதன் பின், காங்கேசன் துறை சென்று இலங்கை வங்கிக்குள் நுழைந்து பாதுகாப்பு அதிகாரிகளை ஆயுத முனையில் மிரட்டி விட்டு, கொள்ளையை நடத்தினர்.

சுமார் 15 நிமிட நேரத்துள் கொள்ளையை நடத்தி முடித்து...

மேற்படி இளைஞர்களிடம் இரண்டு இயந்திரத் துப்பாக்கிகளும், ஒரு ரிவோல்வரும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கொள்ளையை நடத்திய இளைஞர்கள், கடத்திய காரை, அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து விட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

காங்கேசன்துறைப் பொலீஸார் இது சம்பந்தமாக விசா...

அவசரகால நிலை நீக்கப்பட்ட... சூழ்நிலைகளை முன்னிட்டே, தேசிய பாதுகாப்புச் சட்டம் இயற்றப்படவிருக்கிறது.

அவசரகால நிலை நீக்கப்பட்டால், தற்போது கைதானவர்கள், தடுப்புக் காவலில் இருப்பவர்கள் ஆகியவர்களுக்கு எதிரான வழக்குகளைத் தொடர முடியாது போகலாம்.

அவசரகாலநிலை நீக்கப்பட்டதும் சந்தேக நபர்களை விடுதலை செய்ய வேண்டும். அதன் பின் வழக்குகள் தொடர முடி...யாது என சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாத வன்செயல்களில் பெரும் பங்கு கொண்ட பலர், ஜூரிமார் இன்றி, மேல் நீதிமன்றங்களில் நடைபெற வேண்டிய வழக்குகளை எதிர் கொண்டு இருக்கின்றனர்.

சுமார் 600 பேருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் எடுத்திருப்பதாக. அண்மையில் நாடாளுமன்றத்தில் ... தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும் அறிவித்திருந்தார்.

அதனால் தான், தேசிய பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பேணுவதற்காக. புதிய சட்டம் அவசியமாகின்றது எனவும் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரி கூறினார்.

தேசிய பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், சில மாதங்களுக்குள், அவசரகால நிலையை அரசாங்கம் நீக்கி விடும் என அரசியல் அவதானிகள் நம்புகின்றனர். (உ—க)

...ழும்பு, ஜூன் 1
உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் பாலசிங்கம் (20 வயது) என்ற இளைஞரின் சடலம் இணுவில், கரைக்கால் மயானத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

"கொள்ளை, களவு போன்ற நடவடிக்கைகளுக்கான தண்டனை" என்ற வாசகங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் அந்த இளைஞரின் சடலத்துக்கு அருகில் காணப்பட்டன என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். (த- 120)

...தம் தாங்கிய இளைஞர்களால் இக் கொள்ளை நடத்தப்பட்டது.

இக் கொள்ளை சம்பந்தமாகக் கூறப்படுவதாவது:—

மிருக வைத்தியர் ஒருவர் பிரயாணம் செய்த கார் ஒன்றை, திருநெல்வேலியில் வைத்து சில இளைஞர்கள் மறித்து ஏறினர். காரை நீர்வேலிக்குச் செலுத்தும்படி அவர்கள் உத்தரவிட்டனர்.

நீர்வேலியில் வைத்து மற்றும் மூன்று வாலிபர்கள் ... கொள்ளையை நடத்தி முடித்து விட்டு வெளியேறினர்.

...ரணை நடத்தி வருகின்றனர். (த- ௬-120)

இடம்பெயர்ந்த

# 12 ஆசிரியருக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 1
ஜூலை கலவரங்களின் போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட 12 ஆசிரியர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்க கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அனுமதி அளித்தார்.

இடம்பெயர்ந்த ஏனைய தமிழ் ஆசிரியர்களின் இடமாற்றக் கோரிக்கை குறித்து விரைவில் தீர்மானிக்கப்பட இருக்கிறது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த காரியவசம் குழு சிபார்சு செய்திருந்த பட்டியலில் கொழும்பிலிருந்து இடமாற்றம் வழங்க அனுமதிக்கப்பட்ட 113 பேருக்கும் இடமாற்றம் கிடைக்கும்.

கொழும்பைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக மறுபரிசீலனை செய்வதற்காக கலாநிதி ஆ. கந்தையா, திரு. காரியவசம்,

(2ஆம் பக்கம் பார்க்க)

## சங்கீத சபை சான்றிதழுடன் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 1
வட இலங்கை சங்கீத சபையினால் வழங்கப்படும் ஆசிரியர் சான்றிதழ்களைப் பெற்றவர்களும் அரசாங்க பாடசாலைகளில் சங்கீத ஆசிரியர்களாக கடமையாற்ற விண்ணப்பிக்கலாம்.

இதுவரை காலமும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் பயிற்சி பெற்று அரசாங்கத்தால் வழங்கப்படும் தராதரப் பத்திரங்களை உடையவர்களுக்கு மட்டுமே அரசாங்கப் பாடசாலைகளில் சங்கீத ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (த—ய)

இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு:

# பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் கடும் ஆட்சேபனை

## பத்திரிகையாளர் மாநாட்டில் தூதுவர் விளக்கம் ஏற்கெனவே 50 பேர் வந்துவிட்டனர் என்கிறார்

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு நிறுவப்படுவதற்கு பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

இலங்கையிலுள்ள பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தூதுவர் கலாநிதி ஜனாப் ஹைஹலுத்தீன் அப்துல் றஹ்மான் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பிலுள்ள தனது தூதரகத்தில் இது தொடர்பாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை அவர் நடத்தினார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:—

இலங்கையில் இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு ஏற்படுத்தப்படுவது பற்றி எமது ஸ்தாபனம் கடந்த ஒன்பது மாதங்களாகத் தகவல் பெற்று வந்திருக்கிறது. எனவே இது எமக்கு அதிர்ச்சியையோ அல்லது ஆச்சரியத்தையோ தரவில்லை.

இதுபற்றி எமது அதிருப்தியை நாம் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்கனவே தெரிவித்து

(2ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட வெங்காயம் பறிமுதல்

புத்தளம், மே 31
சட்ட விரோதமாக இந்தியாவில் இருந்து சின்ன வெங்காயத்தை கடத்தி வந்த வள்ளம் ஒன்று பிடிபட்டது. சின்ன வெங்காயம் பறிமுதல் செய்யப்பட்டு கடத்தல்காரர்களுக்கு 43 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மாரவிலை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த மட்டக்கொட்டுவ கடற்கரையில் இந்த கடத்தல் வள்ளம் கைப்பற்றப்பட்டது.

2300 கிலோ சின்ன வெங்காயம் இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக கடத்தி வரப்பட்டிருந்தது.

கடத்தல்காரர்கள் இங்கிருந்து சட்ட விரோதமாக நைலோன் வலைகளை கடத்திச் சென்று, இந்தியாவில் விற்று விட்டு, திரும்பும் வழியில் சின்ன வெங்காயத்தை கொண்டு வருகின்றனர் என்பது விசாரணையில் தெரிய வந்தது. (த—ஙு)

## இஸ்ரவேல் வருகைக்கு இலங்கை மலாயர் சம்மேளனம் முழு ஆதரவு

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதை, இலங்கை மலாயர் ஸ்தாபன சம்மேளனம் ஆதரிக்கிறது.

இது சம்பந்தமாக அகில இலங்கை முஸ்லிம் லீக் எடுத்த முடிவை, அது வன்மையாகக் கண்டித்துள்ளது.

இலங்கை மலாயர் ஸ்தாபன சம்மேளனத்தின் விசேஷ அவசரக் கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்றது. ஸ்தாபனத் தலைவர் அல்ஹாஜ் டி. ஏ. மிஸ்கின் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

தேசிய நலன் கருதி, இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவை ஏற்படுத்தவிருக்கும் அரசாங்கத்தின் முடிவை சம்மேளனம் முற்றாக ஆதரிக்கிறது.

முஸ்லிம்களின் நலன்கள் பாதிக்கப்பட மாட்டா. அவை அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களினால் பாதுகாக்கப்படும் என்பதில் மலாயர் ஸ்தாபனம் நம்பிக்கை கொண்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை முஸ்லிம் இயக்கங்கள் எதிர்ப்பு

நிந்தவூர், மே 31
"இலங்கையில் இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு ஏற்படுத்தப்படுவதற்கு அம்பாறை மாவட்ட முஸ்லிம் இயக்கங்கள், தாபனங்கள், கழகங்கள் ஆகியவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை அம்பாறை மாவட்ட மக்கள் பொது காங்கிரஸ் இன்று (வியாழன்) நடத்தியது.

அக்கரைப்பற்றிலுள்ள மேற்படி காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் இயக்கங்கள், தாபனங்கள், கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாப் எம். எம். ஹாசிம், தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவு அமைப்பது தொடர்பாக, வன்மையான ஆட்சேபனையை அரசாங்கத்திற்கு தெரிவிப்பது என கூட்டத்தில் முடிவு செய்தது.

இது தொடர்பாக அரசாங்கத்துக்கும், மற்றும் தூதரகங்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் கேள்விக்கு ஜனாதிபதி அளித்த பதில்

ஹொங்கொங், மே 31
இலங்கையின் வட பகுதிப் பயங்கரவாதத்தை அடக்குவதற்காக நாம் பசாசிடமிருந்தும் உதவி பெறத் தயார்.

இலங்கை திரும்பும் வழியில் ஹொங்கொங்கில் பத்திரிகை நிருபர்கள் மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன.

சீனா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்ட பின்னர் தாயகம் திரும்பும் வழியில் ஜனாதிபதி

(2ஆம் பக்கம் பார்க்க)

## 10 வருடம் பூர்த்தி செய்யாத ஆசிரியருக்கும் கடன்

யாழ்ப்பாணம், மே 31
கடந்த ஜூலை கலவரத்தின் போது உடைமைகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களில் 10 வருட ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கும், ஒரு வருட சம்பளம் கடனாக வழங்கப்படும்.

இந்த கடனை பெற விரும்புவோர் ஜூலை இரண்டாம் திகதிக்கு முன்னர் தமது பகுதி கல்விப் பிரதேச பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை இந்த அலுவலகம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இது சம்பந்தமாக, பொது நிர்வாக அமைச்சு சகல பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளது. (த—ஙு)

# சீசன் டிக்கெட் பணம் ரூ. 18,000 வடக்கில் கொள்ளை

யாழ்ப்பாணம், மே 31
சீசன் டிக்கெட் விற்ற பணம் ரூ. 18 ஆயிரம் கொள்ளை அடிக்கப்பட்டது.

புதன்கிழமை மாலை கொக்குவிலில் இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

கொக்குவில் பல் தொழில் நுட்பக் கல்லூரி அறை ஒன்றில் பிரஸ்தாப தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான சீசன் டிக்கட்டுகளை இ. போ. ச. ஊழியர் மூவர் விற்பனை செய்து கொண்டிருந்தனர்.

விற்பனை முடிந்து மாலை பணத்தை கணக்கெடுத்துக் கொண்டிருந்த பொழுது, திடீர் என சைக்கிளில் வந்த 6 துப்பாக்கி இளைஞர்கள் பணத்தை கொள்ளை அடித்துக் கொண்டு மறைந்தனர்.

இது தொடர்பாக யாழ். உதவிப் பொலீஸ் அதிபர் மனோகரன் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது. (த-120)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# யாழ். மின்சார அலுவலகம் மூடப்படமாட்டாது

## பதில் அமைச்சர் விளக்கம்

இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண அலுவலகம் மூடப்பட மாட்டாது. ஆனால் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினர் வேறு இடங்களுக்குச் சென்று வேலை செய்யும்படி பணிக்கப்படுவர்.

பதில் மின்சார எரிசக்தி அமைச்சர் திரு. பி. தயாரத்ன இவ்வாறு தினபதிக்குத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களை, சிங்களப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்து, அவர்களுக்கு இடையூறுகளை உண்டு பண்ண வேண்டும் என்ற நோக்கமோ அல்லது தொழிலை இழக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணமோ கிடையாது.

இவர்கள் எங்கு கடமைக்குச் சென்றாலும் இவர்களின் சிரமத்திற்கு தகுந்த வேதனமும் பாதுகாப்பும் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாண அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் பிற இடங்களுக்குச் சென்று வேலை செய்ய முன் வருவதில்லை. இதனால் பல வேலைத் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 68 வேலைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆனால் அனுராதபுரம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் 18 வேலைத் திட்டங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

பிற இடங்களில் தாமதப்பட்டிருக்கும் வேலைத் திட்டங்களை துரிதப்படுத்தும் வகையிலேயே யாழ்ப்பாண அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் ஒரு பிரிவினரை பிற இடங்களுக்குச் சென்று கடமையாற்றும்படி பணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என திரு. தயாரத்ன தெரிவித்தார்.

திருகோணமலை பிரதேசத்தில் அவசரமாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்களுக்குக் கூட, சென்று வேலை செய்ய மறுத்து வருகின்றனர்.

அகில இலங்கை ரீதியில் மின்சார சபையின் வேலைத் திட்டங்களைப் பரிசிலனை செய்து பார்த்த போது, யாழ்ப்பாண மாவட்டத்தைத் தவிர இதர மாவட்டங்கள் அனைத்தும் மந்தமான நிலையிலேயே செயல்பட்டிருப்பது தெரிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மின்சார சபையின் அலுவலகத்தை மூடி, அங்கு கடமையாற்றும் தமிழ் ஊழியர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் நோக்கம் எனக்கில்லை.

இப்படி திரு. தயாரத்ன கூறினார்.

கிளிநொச்சி, மன்னார், வவனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் தாமதப்பட்டிருக்கும் வேலைகளைத் துரிதப்படுத்தும்முகமாகவே சில மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

(ண—ய)


## தினபதி சிறு விளம்பரம்

### கதீப் தேவை

ஐவேளை ஜமாஅத் தொழுகை, ஜும்ஆ குர்ஆன் மத்ரஸா என்பவற்றை சிறப்பாக நடாத்தக் கூடிய கதீப் ஒருவர் தேவை. தகுதிச் சான்றிதழ்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்: செயலாளர், ஜாமிஉல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித், உடுதெனியமடிகே, மாரஸ்ஸன.

022651


# நட்சத்திர ஹோட்டல் விவரங்கள்

## நாடாளுமன்றத்தில் லக்ஷ்மன் எழுப்புவார்

கொழும்பு, ஜூன் 1

"இலங்கையில் இருக்கும் ஐந்து நட்சத்திர, நான்கு நட்சத்திர, மூன்று நட்சத்திர, இரு நட்சத்திர ஹோட்டல்களின் பெயர் விவரங்கள் நாடாளுமன்றத்தில் கோரப்படும்.

நாடாளுமன்றம் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை 5ஆம் திகதி கூடுகிறது. மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றம் கூடும் பொழுது, நட்சத்திர ஹோட்டல்களின் விவரங்களை அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி கோருவார்.

வாய்மூல விடைக்கான வினக்களில் நிதி, திட்டமிடல் அமைச்சரிடம் இந்த விவரங்களை அவர் கோரி இருக்கிறார்.

திறைசேரி இந்த ஹோட்டல்களுக்கு முதலிட்டுள்ள நிதி விவரம்; அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ள ஹோட்டல்கள்; 1983 டிசம்பர் வரை அரசாங்கம் பெற்ற பங்கு லாப, வட்டிகள்; 1983 ஆம் ஆண்டுக்குரிய ஐந்தொகை அறிக்கை ஆகிய விவரங்களை திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி கேட்டிருக்கிறார்.

மேலும் நாடாளுமன்றம் 7 ஆம் திகதி, வியாழக்கிழமை கூடும் போது, "சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களில் எத்தனை பேருக்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன" என்ற கேள்வியையும் எழுப்ப இருக்கிறார்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1983 டிசம்பர் 31 ஆம் திகதி வரை, எத்தனை பேர் வெளிநாட்டுக்கான பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தனர் என்றும் —

விண்ணப்பித்தவர்களில் எத்தனை பேருக்கு பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும், அவர்களின் பெயர், முகவரி, தேசிய அடையாள கார்ட் இலக்கங்களின் விவரம் தெரிவிக்க வேண்டும் என்றும் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி கோரியிருக்கிறார்.

இதே வேளை, காலியில் இயங்கிய அலுவலகத்தில் எத்தனை சிங்களவர், முஸ்லிம்கள், இலங்கைத் தமிழர்கள் மற்றும் ஏனையோருக்கும் பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அவர்களின் பெயர் விவரங்கள்; அவர்களுக்காக பிணை ஒப்பமிட்டவர்களின் பெயர் விவரங்கள் யாவும் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் வினா தொடுத்திருக்கிறார்.

(எ—ங)

## நோன்பு மாத விசேட நிகழ்ச்சிகள்

மத்திய வை. எம். எம்- ஏ- இயக்கம் புனித ரமழான் நோன்பு மாதத்தில் பல விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருக்கிறது.

தலைசிறந்த வெளிநாட்டு அறிஞர்களைக் கொண்டு விசேட சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஜூன் 3ஆம் திகதி முதல் ஞாயிறு தினங்களில் தெமட்டகொடையிலுள்ள வை. எம். எம்-

## இன்று திறப்பு விழா

கொழும்பு, ஜூன் 1

யாழ்ப்பாணம் குரோஸ் ட்ரவல் சேர்விஸ் ஸ்தாபனத்தின் சர்வதேச தொலைத் தொடர்பு சேவைப் பிரிவு, இன்று வெள்ளிக்கிழமை மங்களகரமாகத் திறந்து வைக்கப்படும்.

நண்பகல் 12.00 மணிக்கு இத்திறப்பு விழா நடைபெறும்.

(க)



நிந்தவூர் அல் – அஷ்றக் மகா ... நாடாளுமன்ற உறுப்பினர் ...

# பத்திரிகையா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை இரவு ஹொங்கொங்கில் தங்கினார்.

அப்பொழுதே இந்த பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.

பயங்கரவாதிகளை அடக்க இஸ்ரவேலர்களிடம் இருந்து உதவி பெறப்படுமா? என்று நிருபர் ஒருவர் கேள்வி கேட்டார்.

அப்பொழுதே ஜனதிபதி நேரடியாகப் பதில் அளிக்காமல் எந்த பசாசிடமிருந்தும் உதவி பெறத் தயார் என்று தெரிவித்தார்.

ஜூலை வன்செயல்கள் பற்றி ஜனதிபதியிடம் கேட்டபொழுது, அது எதிர்பாராத சம்பவம் என்று அவர் பதில் அளித்தார். மீண்டும் அப்படியான சம்பவம் நடக்காது என்று தாம் நம்புவதாக அவர் கூறினர்.

பயங்கரவாதிகள் மனிதப் பிறவிகள் அல்லர் என்று கூறிய ஜனதிபதி, இந்திய மத்திய அரசு இலங்கையுடன் நல்ல முறையில் ஒத்துழைப்பதாகக் கூறினர்.

ஆனல் தமிழ்நாடு அரசாங்கம் சர்வதேச சம்பிரதாயங்களுக்கு மாருக செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டினர்.

(த)

## இஸ்ரவேல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

பலஸ்தீன மற்றும் அரபுக்களின் அபிலாஷைகளுக்கு அரசாங்கம் அளித்து வரும் ஆதரவு பற்றி, முஸ்லிம் அமைச்சர்கள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் உறுதிமொழி அளித்துள்ளார்கள்.

இஸ்ரவேல் வரவை எதிர்க்கும் முஸ்லிம் இயக்கங்கள், இந்தியாவில் முஸ்லிம் சகோதரர்கள் கொலை செய்யப்படுவதை கண்டிக்காமல் இருக்கின்றன.

தேசிய நலனை முன்னிட்டும், தாய் நாட்டின் கௌரவத்தை மனதில் கொண்டும் அரசாங்கம் எடுத்திருக்கும் இந்த முடிவை எதிர்க்க வேண்டாம் எனச் சம்மேளனம் அனைவரையும் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(க)

# பலஸ்தீன விடு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டோம்.

அத்துடன் இதனல் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றியும் இலங்கை அரசாங்கத்துக்குத் தெளிவு படுத்தி விட்டோம்.

இது இலங்கையின் உள் விவகாரமாகும். இதில் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் எதுவும் செய்வதற்கில்லை.

இஸ்ரவேலின் மொசட் பயங்கரவாதிகளால் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களுக்குத் தீர்வு காண முடியுமா? என்பதை இலங்கை அரசும், மக்களுமே தீர்மானிக்க வேண்டும்.

இஸ்ரவேலர்களின் வருகையால் ஏற்படும் பாதகமான விளைவுகளை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இஸ்ரவேலின் பயங்கரவாத மொசாட் இயக்கத்தின் சர்வதேச ரீதியிலான கறை படிந்த வரலாற்றை இந்த உலகமே அறிந்து வைத்திருக்கிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும், அரபு, முஸ்லிம் நாடுகளுக்கும், அணிசேரா இயக்க நாடுகளுக்கும் இந்த சியோனிசவாதிகள் இலங்கையிலிருந்து கொண்டே குழி தோண்டுகிறார்கள் என்பதை உணர வேண்டும்.

இஸ்ரவேல் உருவாகிய 36 வருட சரித்திரத்தில், அது பல உலக நாடுகளில் இனப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை உலகமே அறியும்.

லெபனனும் இதற்கு ஓர் உதாரணமாகும்.

இஸ்ரவேலின் இந்த சியோனிச கோட்பாடு நாடுகளில் பிரச்சினை உருவாக்குவதே தவிர, பிரச்சினைகளைத் தீர்ப்பதல்ல.

இவ்வாறு பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி ஹைலுத்தீன் தெரிவித்தார்.

நிருபர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கையில் 50க்கும் அதிகமான இஸ்ரவேலின் மொசட் பயங்கரவாத இயக்க அதிகாரிகள் ஏற்கனவே இலங்கை வந்துள்ளனர் எனத் தமக்கு தகவல் கி[illegible]த்திருப்பதாக கூறினர்.

இஸ்ரவேலின் நலன் காப்புப் பிரிவு நிறுவும் விவகாரம் தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் உத்தியோகபூர்வமாக இன்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்த விவகாரம் அரபு நாடுகளின் லீக் நடத்தும் அடுத்த கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் அவர் [illegible]ஞர்.

(த—8)

உல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித், உடுதெனியமடிகே, மாரஸ்ஸன.

022651


## இஸ்லாமிய கீதம்

திருக்குர்ஆன், பூர்தா ஷரீப், பத்ரு மௌலூத், முஹியத்தீன் மாலை, ஐய்யூப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி) சரித்திரம், நோன்பின் சிறப்பு, நூறு மஸாலா, காரைக்கால் தாவூத் ஈ. எம். ஹனீபா, சேக் முஹம்மது, ஹுஸைன்தீன் மற்றும் பலர் பாடிய இஸ்லாமிய கீதங்கள், நாயகத்தின் பிறப்பின் சிறப்பு போன்றவை, பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்க சிறந்த இடம்.

Twinkle, P 1. Front Street
Colombo 11.

வி. இ. 031342


## அரசாங்க அறிவித்தல்

எனது இலக்கம் 3/2/3/9/785
1984—05—17,
கம்பஹ மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில்.

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்**

இங்கு கீழ் தரப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது. மேலதிக விவரங்கட்கு 1984ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி 297/29 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

உப அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு:— மீரிகம.

கிராமம் அல்லது ஊர்:— பத்தலகம பனமலந்த.

அமைப்பு:— ... ... ...

காணியின் பெயர்:— பஹலபிட்டி கும்புற.

நில அளவைப்பட இலக்கம்:— 190.

நிலத் துண்டிலக்கம்:— 1 — 2.

எஸ். எச். விதானகே,
கம்பஹ மாவட்டக் காணி அலுவலர்.

வி. இ. 1308

...ளப்பட்டிருக்கின்றன.

ஜூன் 3ஆம் திகதி முதல் ஞாயிறு தினங்களில் தெமட்டகொடையிலுள்ள வை. எம். எம். ஏ. பேரவைத் தலைமையகத்தில் இச்சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும்.

ஒலிப்பதிவான பேச்சுக்களையும் பேட்டிகளையும் கேட்பதற்கும் வசதி செய்யப்படும். (எ—7)

## வணசிங்கா இந்தியா பயணம்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். வணசிங்கா, அனைத்து இந்திய பல்கலைக் கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, அவர் இன்று (வியாழன்) இந்தியா பயணமானார்.

இந்திய மாநிலமான மகாராஷ்ரத்தில் மாநாடு 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை நடைபெறும்.

"பல்கலைக்கழகத்தின் உயர் கல்வியின் தரமும் அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையும்" என்ற தலைப்பில் திரு. வணசிங்க, மாநாட்டில் உரையாற்றுவார் (து—ந—120)

நண்பகல் 12.00 மணிக்கு இத்திறப்பு விழா நடைபெறும். (க)

## 12 ஆசிரியர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. யூ. அபேகுணசேகர ஆகியோர் அடங்கிய மூவர் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இடமாற்றம் பெறத் தகுதி உடையவர்களுக்கான இடமாற்ற உத்தரவுகள் யாவும் இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் முன்பு கடமையாற்றிய பாடசாலைகளுக்கு கடமைக்குத் திரும்பிய பின்னரே வழங்கப்படும். (த—ய)

## இடமாற்றம் ரத்து

தலைமன்னார், மே 31

மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா. செந்தில்நாதனின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஜூன் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இவர் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த இடமாற்றமே தற்பொழுது ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. (து—286)



நிந்தவூர் அல் - அஷ்றக் மகா வித்தியாலயத்திற்கு அம்பாறை மாவட்ட மக்கள் ஒன்றியம் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 இரும்புக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது.

இந்த இரும்புக் கதிரைகளைக் கையளிக்கும் வைபவம் வித்தியாலய அதிபர் அல்ஹாஜ் எம். எச். யாகூப் ஹஸன் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதம அதிதியாக பொத்துவில் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஐ. உதுமா லெவ்வை கலந்து கொண்டார்.

மக்கள் ஒன்றியப் பொதுச் செயலாளர் ஜனாப் எம். எம். ஹாசிம் வைபவத்தில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபரும் படத்தில் காணப்படுகிறார்.

(எ—217)

[படம்: ஏ. எல். எம். சலீம்]

நாடுகளுக்கும் இந்த சியோனிச வாதிகள் இலங்கையிலிருந்து கொண்டே குழி தோண்டுகிறார்கள் என்பதை உணர வேண்டும்.

அரபு மக்கள் இந்த விவகாரத்தில் எத்தகைய உணர்ச்சிகளைக் கொண்டுள்ளார்கள் என்பதை நான் அறிவேன்.

எனவே, இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஆத்திரத்தை வெளிப்படுத்த வேண்டாம் என்றும் —

அரபு நாடுகள் பலவற்றிலும் தொழில் பார்க்கும் லட்சக்கணக்கான இலங்கையர்களின் நலன்களைப் பாதிக்கும் விதத்தில் செயல்பட வேண்டாம் என்றும், நான் அரபு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

அடுத்த கூட்டத்தில் ... படும் என்றும் அவர் ... ளூர். (து—8)

## அம்பாறை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் முதலானோருக்கும் மகஜர்களை அனுப்பி வைப்பது என்றும் —

அம்பாறை மாவட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை விசேஷ குழு ஒன்று சந்தித்து இந்த விடயத்தில் ஆவன செய்யுமாறு தூண்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (து—ந6217)

# வவுனியா மாவட்ட மாணவருக்கு தேசிய அடையாளக் கார்ட்

## விநியோக வேலைகளுக்கு ஏற்பாடு

பளை, ஜூன் 1

வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள கார்டுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை வவுனியா பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. பி. சிவபாதம் மேற்கொண்டிருக்கிறார்.

ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் தேசிய அடையாள கார்டுகளுக்கு விண்ணப்பிப்பது தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவிருக்கின்றன.

வவுனியா தமிழ் கல்வி வட்டாரத்திற்கான பயிற்சி வகுப்புகள். எதிர்வரும் 4 ஆம் திகதி சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், செட்டிகுளம் கல்வி வட்டாரத்திற்கான வகுப்புகள் எதிர்வரும் 5 ஆம் திகதி செட்டிகுளம் மகா வித்தியாலயத்திலும் புளியாட்டுகுளம் கல்வி வட்டாரத்திற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி புளியங்குளம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

வவுனியா சிங்கள கல்வி வட்டாரத்திற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி காமினி சிங்கள மகாவித்தியாலயத்தில் நடத்தப்படும்.

வவுனியா மாவட்டத்தில் ஜி. சி. ஈ. சாதாரண வகுப்புக்கள் வரை உள்ள பாடசாலை அதிபர்களை, ஆசிரியர் ஒருவருடன் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளும்படி பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார். (ஞ—239)

# புனித ரமழான் சிந்தனைகள்

வல்ல அல்லாஹ்வின் நாமத்தால் புனிதமிக்க ரமழானின் சிந்தனைகளை இப்பகுதியில் இன்று முதல் ஆரம்பிக்கிறோம்; அல்ஹம்துலில்லாஹ்!

அருள் சொரியும் அருமை மிக்க ரமழான் நோன்பு மாதத்தில் நாம் நோன்பு நோற்று நல்ல கருமங்களைச் செய்து அல்லாஹுத்த ஆலாவின் நல்லருளைப் பெற்றுக் கொள்ள திடசங்கற்பம் பூணுவோம்; அல்லாஹ் அருளட்டும்.

உபவாச காலத்தில் உயர் சிந்தனைகள் எம் மனதில் நிலைபெற வேண்டும். நோன்பின் மாண்பை நாம் பேணி நடக்க வேண்டும். எம்மைச் சிறந்த முஸ்லிம்களாக நாம் மாற்ற வேண்டும்.

இறைமறையாம் புனித திருக்குர்ஆனிலே அல்லாஹுத்த ஆலா ரமழான் மாத மாண்பையும் சிறப்பையும் தெளிவுற விளக்கியுள்ளான்.

ரமழான் மாதம்; எத்தகைய (மகத்துவமுடைய)து என்றால் அதில் தான் திருக்குர்ஆன் (என்னும் வேதம்) அருளப் பெற்றது.

அது மனிதர்களுக்கு நேர் வழியாகவும் (நன்மை, தீமையைப்) பிரித்தறிவதற்கு தெளிவாகவும் உள்ளது.

ஆகவே, உங்களில் எவன் அம்மாதத்தை அடைகின்றானோ அவன்; அதில் நோன்பு நோற்கலாம்.

ஆனால் (அக்காலத்தில் உங்களில்) யாராவது நோயாளிகளாகவோ, அல்லது யாத்திரையிலோ இருந்தால், (ரமழான் அல்லாத) மற்ற நாட்களில் (விட்டுப் போன நாட்களின் நோன்பைக்) கணக்கிட்டு (நோற்று) விடவும்.

அல்லாஹ் உங்களுக்கு இலகுவான (கட்டளையைக் கொடு)க்க விரும்புகிறானே ஒழிய கஷ்டத்தைக் (கொடுக்க) விரும்பவில்லை.

தவிர, தவறிய நாட்களைக் கணக்கிடும்படி கட்டளையிட்டதெல்லாம் உங்கள் மீது கடமையாக உள்ள முப்பது நோன்பின் எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்து, அல்லாஹ் உங்களை நேரான வழியில் நடத்தியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும், நோய், யாத்திரை போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காதிருக்க உங்களுக்கு அனுமதி அளித்து எல்லாம் நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்குர்ஆன் 2:185)

ரமழான் வந்து விட்டது. அதிலுள்ள பரக்கத்தை மக்கள் தெரிந்து கொண்டால் வருடமுழுவதுமே ரமழானாக இருக்க விரும்புவார்கள்.

ரமழான் வந்து விட்டால் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகின்றது; அருள் வழிகள் திறக்கப்படுகின்றன.

இவ்வாறு மிஷ்காத்தில் ரமழானின் மகத்துவம் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ரமழானின் சிறப்பை நாம் இவ்வாறு ஆராய ஆராய பல அரிய கருத்துக்களை நாம் பெற்றுக் கொள்ளலாம். ரமழான் மீண்டும் ஒருமுறை எம்மை வந்தடைந்துள்ளது. இந்த புனித மாதத்தில் நாம் எம்மைப் பரிசுத்தவான்களாக மாற்றிக் கொள்வோம்.

ரமழானின் அருளைக் கொண்டு அல்லாஹுத்த ஆலா நமக்கு ரஹ்மத்தை அள்ளித் தருவானாக! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

—எப். எம். டைரூஸ்


## பிறந்த நாள் வாழ்த்து



"நபீஸதுஸ் ஸிபாதிய்யா"

காத்தான்குடி—5, மார்க்கட் ரோட், சரீபா ஹவுஸ்சைச் சேர்ந்த ஹஜ்ஜி மொஹம்மட் உம்முசரீபா தம்பதிகளின் திருநிறை செல்வி "நபீஸதுஸ் ஸிபாதிய்யா" தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (1—6—1984) மிகச் சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை வாப்பா, உம்மா, வாப்பம்மா, உம்மம்மா, மூத்த வாப்பா, மாமிமார்கள், மாமாமார்கள், சாச்சிமார்கள், பெரி உம்மா ஆகியோர் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென எல்லாம் வல்ல இறையோனை பிரார்த்திக்கிறார்கள்.

வி. இ. 028029

# FORD 3910

# போட் டிராக்டர்கள் அதன் மாறுபட்ட நிலை வளர்ந்து வருகிறது


**எதற்கும் நிகரில்லாத அந்த டிராக்டர் கையிருப்பிலிருந்து கிடைக்கும்.**

## என்ஜின்:
50 ஹோர்ஸ் பவர்.
3 சிலிண்டர் என்ஜின்,

## கியர் பெட்டி:
இணைந்து வேலை,
8 முன்பக்கம், 2 பின்பக்கம்,

## ஹைட்ரோலிக்ஸ்:
சுதந்திரமாக இயங்கக் கூடிய
540 ஆர். பி. எம்,
தூக்கக் கூடிய பம்பு பி டி ஓ
அதிசக்தி.

## ஆசனம்:
வேண்டிய மாதிரி அமைக்கக்
கூடிய சொகுசான ஆசனம்



விவசாயத்தில் தன்னிறைவு பெறும் பல நாடுகளுக்கு, 65 வருடங்களுக்கும் மேலாக, போட் டிராக்டர்கள் உதவி வருகின்றன.

அதன் மகிமை என்றுமில்லாதவாறு இன்று தெரிகிறது.

ஒவ்வொரு போட் டிராக்டரும் அதி சிறந்த தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. விவசாய தேவைக்கென உற்பத்தியான போட், 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு உதவுகிறது. அதிக உணவு தேவைப்படும் உலகுக்கு இதன் உதவி அளப்பரியது.

அத்தியாவசிய பாகங்களையும், பராமரிப்பையும் வழங்குவதே எமது குறிக்கோள்.

### வியாபாரிகள்

சத்தியவாதி ஸ்டோர்ஸ்
அன் மோட்டார்
டிரான்ஸ்போட்டர்ஸ்
லிமிட்
தர்மபால மாவத்தை,
அனுராதபுரம்.

காதிக் (சிலோன்) லிமிட்,
125/3, நாவல வீதி,
நாரஹென்பிட்டி.
கொழும்பு – 5.
போன்:– 588321, 589263

காதிக் (சிலோன்) லிமிட்,
புல்னேவா, கல்னேவா.

கூடிய சொகுசான ஆசனம

**பிரேக்குகள்:**

டிஸ்க் பிரேக்—தூசி, சேறு படாமல் பாதுகாப்பு உண்டு.

மரிப்பையும் வழங்குவதே எமது குறிக்கோள்.

இதுதான் போட் டிராக்டரின் மாறுபட்ட நிலைமை. இந்த மாறுபட்ட நிலையால் அதன் மகிமை வளர்கிறது.

புல்னேவா, கல்னேவா.

காதிக் (சிலோன்) லிமிட், கண்டி வீதி, திருகோணமலை. போன்:- 026 - 2385

யாழ். கோப்பரேசன், கண்டி வீதி, பரந்தன்.

வி. திருநாவுக்கரசு, ராஜன் இன்டஸ்ரீஸ், வவுனியா.

எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.

எம். ஆர். பெர்ணண்டோ அன் கோ. லிமிடட் பெர்ணண்டோ டவுன், மெயின் வீதி. அட்டன்.

மோட்டார் சேர்விஸ் ஸ்டேஷன், பண்டாரவளை.

நாரம்மல மோட்டார்ஸ், வென்னப்புவ.




FORD NEW SERIES 10 TRACTORS BUILT TO BE RELIED ON

Ford

## சத்தியவாதி ஸ்டோர்ஸ் அன் மோட்டார் டிரான்ஸ்போட்டர்ஸ் லிமிட்,

21, தம்புல்ல விதி, குருநாகல்.

தொலைபேசி : 037 - 22388, 23183, 23184.

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 1
— சுடர் 17 கதிர் 2690 —

## உற்பத்தி முழுவதும் ஏற்றுமதியா?

சோயா பிளேக்ஸ் என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் சோயா அவல் இலங்கையில் பலராலும் விரும்பப்படும் ஒரு உணவுப் பொருள்.

சம்பலில் மாசிக் கருவாட்டுக்குப் பதிலாகச் சோயா அவல் பயன்படுத்தப்படுகிறது.

பருப்புப் போலக் கறிக்கும் சோயா அவல் உபயோகிக்கப் படுகிறது.

தேங்காய், சர்க்கரை ஆகிய வற்றைச் சேர்த்து அப்படியே சோயா அவலை உண்பவர் களும் பலர் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருக்கும் இப்பொழுது ஒரே ஏமாற்றம். சோயா அவல் கிடைப்பது அரிதாகிவிட்டது.

காரணம் என்ன?.

சோயா அவல் உற்பத்தி நின்று விட்டதா?

இல்லை.

குண்டசாலையில் உள்ள சோயா தானியப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்று தொடர்ந்து சோயா அவலை உற்பத்தி செய்து வருகிறது.

சோயா அவலுக்கு வெளிநாடுகளில் மிகுந்த கிராக்கியாம். குறிப்பாக மேற்கு ஜெர்மனியில் சோயா அவலை விரும்பி வாங்குகிறார்களாம்.

குண்டசாலை சோயாப் பொருள் உற்பத்தி தொழிற்சாலையில் தயாரிக்கப்படும்

# மதுரபாவனை-பக்தியின் உயர்ந்த வடிவம்

## அது ஆத்ம சமர்ப்பணமாகும்

செயல் ஒவ்வொன்றும் பக்தி உணர்வை எழுப்புவதாய் அமைதல் வேண்டும்.

பூஜை அறையைத் துப்புரவாக வைத்திருங்கள். அறையை அலங்கரியுங்கள். நறும்புகை எழுப்புங்கள். தீபமேற்றுங்கள்.

தூய ஓர் ஆசனம் அமையுங்கள். நீராடித் தூய ஆடை அணியுங்கள். நெற்றியில் விபூதி அல்லது பஸ்மம், குங்குமம் ஆகியவற்றை அணியுங்கள். உருத்திராட்சமாலை அல்லது துளசி மாலை தரியுங்கள்.

இவையாவும் உள்ளத்தில் பக்தியுணர்வை ஏற்படுத்தி உள்ளத்தை உயர் நிலையடையச் செய்யும். உமது மனம் நாடும் தெய்வத்தைப் போற்றுதற்கேற்ற மனோநிலையை அல்லது உணர்வை உருவாக்க அவை உதவும். மனம் எளிதில் ஒரு நிலையடையும்.

நன்னடத்தைப் பயிற்சி, நல்லோர் கூட்டம், ஜபம், தெய்வீக சிந்தனை, கீர்த்தனம், பிரார்த்தனை, இறைவழிபாடு, ஞானிகளுக்குச் சேவை செய்தல், யாத்திரை தலங்களில் வாழ்தல், தெய்வீக உணர்வுடன் ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் சேவை செய்தல், வர்ணாச்சிரம தர்மங்களை மேற்கொள்தல், எம் செயல்கள் யாவற்றையும் அவற்றின் பலனையும் இறைவனுக்கே அர்ப்பணித்தல், உயிர்கள் யாவற்றிலும் இறைவன் இருத்தலை உணர்தல், தெய்வச் சிலைகள், ஞானிகள்முன் அடிபணிந்து

வெள்ளி விருந்து

வணங்குதல், லௌகிக இன்பங்களையும் செல்வத்தையும் துறத்தல், தான தருமம், துறவு, நோன்புகளை மேற்கொள்ளுதல், அகிம்சை, சத்தியம், பிரம்மசரியம் ஆகியவற்றை அனுஷ்டித்தல் யாவும் பக்தியை விருத்தி செய்ய உதவும்.

### பக்தி யோகத்தில் இடம்பெறும் பாவனைகள்

பக்தியில் ஆறுவகையான பாவனைகள் உள்ளன.

சாந்த பாவத்தில் பக்தன் சாந்தமும் அமைதியுமுடையவனாவான். அவன் குதித்து ஆடுவதில்லை. அவன் மிக்க உள்ளக் கிளர்ச்சியடைவதில்லை. அவனது உள்ளத்தில் அன்பும் இன்பமும் பொங்கி வழியும்.

பீஷ்மர் ஒரு சாந்த பக்தராக விளங்கினார்.

தாச பாவனையில் பக்தியை மேற்கொண்டவன் ஸ்ரீ அநுமான். அடியாராகத் தன்னைக் கருதித் தன் தெய்வத்தை வழிபட்டவன். இதயபூர்வமாக இராமபிரானுக்குச் சேவை செய்தான். தனது எஜமானனைப் பல வழிகளிலும் திருப்திப்படுத்தினான். எஜமானனுக்குச் சேவை செய்தலில் ஆனந்தமும் பேரின்பமும் கண்டான்.

சக்கிய பாவனையிற் கடவுள் பக்தனின் தோழனாவான்.

ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றி அர்ச்சுனன் இத்தகைய உணர்வு கொண்டான். பக்தன் இறைவனைச் சம நிலையில் அணுகுவான். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் நெருங்கிய நண்பர்களாய் ஒருங்கே உண்டு, களித்துக் கதைத்து நடந்து திரிவதுண்டு.

வாத்சல்ய பாவத்தில் பக்தன் இறைவனைத் தன் குழந்தையாகவே கருதி வழிபடுவான்.

யசோதை ஸ்ரீ கிருஷ்ணனைத் தன் குழந்தையாகவே கருதினாள்.

கடவுளை உங்கள் அருமைக் குழந்தையாகக் கருதும் இப்பாவனையினால் அச்சம் எதுவும் இல்லை. பக்தன் இறைவனைத் தன் குழந்தையாகவே கருதி அவனுக்குத் தாய்போற் சேவை செய்வான்; உணவு தருவான்.

ஐந்தாவது பாவனை சகியா பாவனை. இது கோபியர் பாவனை எனவும் அழைக்கப்படும்.

கோபியர் தாங்கள் பிரிந்து சென்ற பொழுது கிருஷ்ணனையும், இராதையையும் ஒன்று சேர்த்தனர். தம்மை இராதையும் கிருஷ்ணனுமாகவே பாவித்து அவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தபொழுது அடைந்த பேரின்பத்தைத் தாமும் நுகர்ந்தனர்.

இறுதியாகவுள்ளது இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கொண்டு வணங்கும் மதுரபாவனை அல்லது காந்தா பாவனை.

பக்தியின் உயர்ந்த வடிவம் இது. கிருஷ்ணனுக்கும் இராதைக்கு மிடையேயிருந்த உறவு முறை இத்தகையது. அது ஆத்ம சமர்ப்பணமாகும். தலைவனும் தலைவியும் ஒன்றேயாய் விடுவர்.

பக்தனும் இறைவனும் இரண்டறக்கலந்தும் தமக்கிடையே நிகழும் ஆழ்ந்த காதலின் பேரின்பத்தினை நுகர்தற்காகத் தம் தனித் தன்மையை இழப்பதில்லை. ஐக்கியத்தில் வேற்றுமையும் வேற்றுமையில் ஐக்கியமும் இங்கு புலனாகும்.

கணவன் மனைவியரிடையே நிகழும் அன்பின் தொடர்பை ஒத்தது இது. ஜயதேவர், மீராபாய், ஆண்டாள் ஆகியோர் இப்பாவனையை அனுஷ்டித்தனர்.

[சுவாமி சிவானந்தரின் அருளுரைகளில் இருந்து தொகுக்கப்பட்டவை]

(ல)

# முல்லைத்தீவு மக்களுக்கு விறகு விநியோகம்

## ப. நோ. கூ. சங்கம் மூலம் நடத்த ஏற்பாடு

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மக்களின் விறகுக் கஷ்டத்தைப் போக்குவதற்காக அவர்களுக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக விறகு விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்,

இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு அரசாங்க அதிப

அவர் மேலும் தெரிவிக்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் பகுதி காட்டுப் பிரதேசமாக இருப்பினும் இப்பகுதி மக்கள் விறகு பெறக் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் சட்டத்தை மீறி இங்கிருந்து காட்டு மரங்களை ஏற்றிச் செல்வதைத் தடை செய்ய, அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை.

பாவனையாளர்கள் தமக்கு விறகு விநியோகிக்க ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனால் விறகு கொள்வனவு செய்வோர் குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தமது விண்ணப்பத்தை உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுடன் ஒப்படைத்தால், மேற்படி சங்கம் விறகுகளை நேரடியாக விநியோகிக்கும்.

இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிலை இங்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் விறகு ஆலை அமைக்கும் வரை அமுலில்



# செய்தித் திரட்டு

## வெங்காயம்

கொழும்பு, ஜூன் 1

அம்பாறை, பொத்துவில் மாவட்டங்களில் இம்முறை சிறுபோகத்தின் போது வெங்காய பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அண்மையில் ஏற்பட்ட வெங்காயத் தட்டுப்பாட்டை அடுத்தே மேற்படி பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

(ல—ந)

## நிலையங்கள்

பேசாலை; மே 31

மன்னார், பேசாலை ஆகிய பகுதிகளில் கருப்ப நீர் சேகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(ல—2[illegible])

## போட்டி

கெக்கிருவ, மே 31

கம் உதாவ 6-ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுப் போட்டி அண்மையில் அனுராதபுரம் சாகிரு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

"10 லட்சம் வீடுகள் புதிய யுகம்" என்ற தலைப்பில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

(ஜ—[illegible])

## கருத்தரங்கு

வாழைச்சேனை, மே 31

கல்குடா விஷ்ணு சனசமூக நிலையத்தினர், மட்டக்களப்பு வளர்ந்தோர் கல்விப் பிரிவுடன் ஒன்றிணைந்து, கல்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் முதியோர்களுக்கான கல்விக் கருத்தரங்கு ஒன்றை நடத்தி வருகின்றனர்.

இக்கருத்தரங்கின் முதல் கட்டமாக கல்குடாப் பகுதி கிராம மக்களின் தொழில் வளம் பற்றி ஆராயப்பட்டது.

(ஜ—319)

## தென்னை நடுகை

கொழும்பு, ஜூன் 1

கேகாலை, மொனராகலை மாவட்ட மாதிரிக் கிராமங்களில்

குண்டசாலை ... சோயாப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் சோயா அவல் இப்போது மேற்கு ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அதனால்தான் இலங்கையில் சோயா அவலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

இலங்கையின் சோயா அபிவிருத்தித் திட்டத்தை மக்களிடையே பிரசாரம் செய்வதற்காக கெயர் நிறுவனம் "சோயா செய்தி" என்ற பெயரில் மாத சஞ்சிகை ஒன்றை ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் வெளியிட்டு வருகிறது.

அந்தச் சஞ்சிகை தான் தனது மே மாத இதழில் சோயா அவல் ஏற்றுமதியாகும் தகவலை வெளியிட்டு இருக்கிறது.

எந்தப் பொருளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சம்பாதிப்பதில் தவறில்லை.

ஆனால் அந்தப் பொருள் இலங்கை மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இலங்கை மக்களின் உபயோகத்துக்காக இங்கே விற்பனை செய்யாமல் பொருள்களை அப்படியே வெளிநாடுகளுக்கு அனுப்புவது முழுப் பிழை.

இலங்கை மக்களின் தேவைக்கு அதிகமாக இருக்கும் பொருள்களை மட்டும் ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணி சம்பாதிப்பது தான் சரியான முறை.

இலங்கை மக்கள் சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே அரசாங்கம் சோயாத் திட்டத்தை ஆரம்பித்தது.

சோயாவில் சுமார் 40 சதவீதம் புரதச் சத்து உண்டு. மீன், இறைச்சி, முட்டை ஆகியவற்றில் கூட இவ்வளவு புரதச் சத்துக் கிடையாது.

இப்படிப்பட்ட ஒரு நல்ல உணவுப் பொருளை, இங்குள்ளவர்களைப் பட்டினி போட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவது நியாயமா? இதை அரசாங்கம் அனுமதிக்குமானால் சோயா சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்த தன் நோக்கமே அடிபட்டுப் போய்விடும்.

சோயா அவலைப் போல சிங்கி இறால் போன்ற இறால் வகைகளும் இந்நாட்டு மக்களுக்குக் கிடைப்பதில்லை. அவையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த நிலை மாற வேண்டும்.

---

...ருக்கிறேன்.

இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளருமான திரு. கே. கே. ஞானச்சந்திரன்.

அண்மையில் முல்லைத்தீவுப் பிரதான வீதியிலுள்ள சகல தேநீர் கடைகளும், ஹோட்டல்களும், பேக்கரிகளும் விறகு இல்லாததைத் தெரிவித்து கதவடைப்பு செய்தனர்.

அதற்கு அடுத்த நாளும் விறகுத் தட்டுப்பாட்டைக் காட்டும் அடையாளமாக, முதல்நாள் கதவடைப்புச் செய்த வர்த்தக நிலையங்கள் உட்பட பல சரக்குக் கடைகள், புடைவைக் கடைகள், சலூன்கள், போன்ற சகல வர்த்தக நிலையங்களும், நண்பகல் 12 மணிவரை கதவடைப்புச் செய்தன.

இதையிட்டுத் தினபதி நிருபர் முல்லைத்தீவு அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து வினவிய பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

...களை ஏற்றிச் செல்வதைத் தடை செய்ய, அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை.

அரச மரக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டு, இப்பகுதியில் விறகு ஆலையொன்றை அமைக்கும்படி கேட்டிருக்கிறேன்.

மக்கள் முறையாக விண்ணப்பம் செய்தும் மரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

இதனால் அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்பு, கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விறகு விநியோகிக்க ஒழுங்கு செய்திருந்தது.

ஆனால் இப்பகுதிகளில் மரங்களை வெட்டி ஏற்றுபவர்கள், அவற்றை மலிவாகப் பெற முடியும் என்ற நோக்கத்தில், கூட்டுறவுச் சங்கம் மூலமாகப் பெற விரும்புவதில்லை.

இதன் காரணமாக கூட்டுறவுச் சங்கமும், இலங்கை அரச மரக் கூட்டுத்தாபனமும் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

...

இந்த நிலை இங்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் விறகு ஆலை அமைக்கும் வரை அமுலில் இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ல-198)

---



# மாணவ சமூகத்தின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகாண வேண்டும்?

## கருத்தரங்கில் உரை

கொழும்பு, ஜூன் 1

மாணவ சமூகத்தினர் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு, தாமே அவற்றுக்குத் தீர்வு காண முயல வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனத்தின் தலைவர் ஜனாப் எம். எம். நௌஸாத் இவ்வாறு தெரிவித்தார்.

சம்மேளனத்தின் "பாஷா விலா" அலுவலகத்தில் அண்மையில் "தற்கால இலங்கையும் அதில் முஸ்லிம் மாணவர் பங்கும்" என்ற தலைப்பில் முழுநாள் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:—

மாணவ சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பை மற்றவர்களிடம் அளிப்பதால் தான் அவை தீர்வு காணப்படாமல் விடப்படுகின்றன.

இதனாலேயே முஸ்லிம் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அராய இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு ஜனாப் நௌஸாத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் முஸ்லிம் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், கல்வி, சமூகம், பொருளாதாரம், மார்க்கம் ஆகிய நான்கு தலைப்புக்களின் கீழ் ...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், மட்டக்களப்பு பல்கலைக் கழக கல்லூரி ஆகியவற்றின் முஸ்லிம் மஜ்லிஸ் பிரதிநிதிகளும் இதில் பங்கு பற்றினார்கள்.

மேற்படி நான்கு தலைப்புகளின் கீழும் ஆராயப்பட்ட பிரச்சினைகளை அவ்வத் தலைப்புகளின் கீழ் ஒன்றுபடுத்தவும். அவற்றுக்கான தீர்வுகளை சம்மேளனத்துக்கு சிபாரிசு செய்யவும் நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டன.

இதுபற்றி முழு அறிக்கையை சம்மேளனம் விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன் வைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்மேளனச் செயலாளர் ஜனாப் சப்ரி எ. காதர், ஜனாப் எச். எம். இமாமுதீன், ஜனாப் எம். எம். றஸீன் உட்படப் பலர் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

(ல-8)

---

# வெள்ளை மணல் தூய ஆவியின் வருடாந்த விழா

சீனக்குடா, ஜூன் 1

சீனக்குடா, வெள்ளை மணல் தூய ஆவியின் வருடாந்த விழா இன்று ஜூன் முதலாம் திகதி [illegible] ...பமாகும்.

தொடர்ந்து பத்து தினங்களுக்கு மாலையில் செபமாலை, பிரார்த்தனை, திருப்பலிப்பூசை என்பன இடம்பெறும்.

ஜூன் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று திருவிழா, கூட்டுப் பலிபூசை என்பன இடம்பெறும். அத்துடன் கொடி இறக்கு வைபவத்தோடு விழா நிறைவு பெறும். (ல)

---

# சமூக விரோத செயல்கள் அதிகரிக்கக் காரணம்?

## லொக்குபண்டார விளக்கம்

பண்டாரவளை, மே 31

"மாணவர்களும் இளைஞர்களும் போதை வஸ்துக்களை பாவிப்பது நாகரிகம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏற்படும் கெடுதிகள் மிகப் பயங்கரமானதாகும். மாணவர்கள் போதைவஸ்துக்கு அடிமையாவதனால் தான் சமூக விரோத செயல்கள் அதிகரித்திருக்கின்றன.

இவ்வாறு கூறினார் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார.

பண்டாரவளை கல்விப் பிராந்தியத்தைச் சேர்ந்த கஹா கொல்லை மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"இன்றைய இளைஞர்களும், மாணவர்களும் நாகரிகம் என்ற பெயரில் அநாகரீகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பெற்றோரையும், ஆசிரியர்களையும் மதிக்காமல் இன்றைய மாணவ சமுதாயம் வளர்கிறது. சமூக விரோத செயல்களிலும் ஈடுபட்டு வருகிறது. இது பெருங் கவலைக்குரியதாகும்.

இத்தகைய செயல்கள் நமது நாட்டின் 2500 வருட கலாசார பாரம்பரியத்தையே குழி தோண்டி புதைக்கும் செயல்களாக இருக்கின்றன.

நாட்டின் முக்கிய மூலதனம், மாணவர் சமுதாயமேயாகும். அவர்களை நேர்வழிப் படுத்தி, சமுதாயத்திற்கு பயன்படும் பண்பாளர்களாக மாற்ற வேண்டியது ஆசிரியர்களினதும் பெற்றோரினதும் கடமையாகும்.

சிறந்த அறிவை புகட்டுவதன் மூலமும், சமய நிகழ்ச்சிகளில் ஈடுபடச் செய்வதன் மூலமுமே இளம் சமுதாயத்தின் தீய பாதையை மாற்றியமைக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

(ல-39)

---

# உற்சவம்

வெலிகாமம், மே 31

கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஆகஸ்ட் 12ஆம் திகதியுடன் மேற்படி உற்சவம் முடிவடையும்.

(ஜு-331)

---

கரவெட்டிப் பங்குத் தந்தை அருட்திரு. ஞானானந்தன் அடிகளார் துன்னாலை அன்னை நூலக ஆண்டு விழாவையும் பாலர் பாடசாலைத் திறப்பு விழாவையும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தபின் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அருகில் விழாவுக்குத் தலைமை வகித்த திரு. என். கணேசமூர்த்தி, யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை, புலோலி உப அலுவலக நூலகப் பொறுப்பாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், உடுப்பிட்டி கல்வியதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம், துன்னாலை தெற்கு கிராம சேவை அலுவலர் திரு. எஸ். ஏ. ஞானச்சந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதை படத்தில் காண்க. (ல)

---

# இடியினால் தாக்குண்டு மரணம்

எட்டியாந்தோட்டை, மே 31

புல் வெட்டிக் கொண்டிருக்கும் வேளையில் இடியினால் தாக்குண்டு ஒருவர் மரணமானார்.

உடபாகை தோட்டத்தைச் சேர்ந்த இருபது வயது நிரம்பிய இளம் பெண்ணே இப் பரிதாப மரணத்திற்கு ஆளானார்.

(எ-346)

---

# மஹியங்கனைக்கு பள்ளிவாசல் வேண்டும்

## ஆசிரியருக்கு கடிதம்

மஹியங்கனைப் பகுதியில் இருநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் இருக்கின்றன.

எனினும் இங்கு முஸ்லிம்களுக்காக ஒரு பள்ளிவாசல் இல்லாதது பெருங் குறையாகும்.

முஸ்லிம் கலாசார அமைச்சு, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இத்தகைய குறை இருப்பது வருந்தத்தக்க விடயம்.

இப்பகுதி முஸ்லிம்களுக்காக இங்கு ஒரு பள்ளிவாசலை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டி. எல். எம். அலியார்
மஹியங்கனை.

---

கொழும்பு, ஜூன் 1

கேகாலை, மொனராகலை மாவட்ட மாதிரிக் கிராமங்களில் தென்னை நடுகை செய்யப்பட்டு வருகின்றது.

இப்பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கமும், தென்னை அபிவிருத்திச் சபையும் ஒன்றிணைந்தே மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தென்னை நடுகையில் ஈடுபடுபவர்களுக்கு தென்னங் கன்றுகளை இலவசமாக வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

(ல-ரு)

# மின் வசதி

புங்குடுதீவு, மே 31

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த கரம்பைக்குண்டு வீதிக்கு விரைவில் மின் வசதி கிடைக்கும்.

இதற்கான ஏற்பாடுகளை மின்சார சபை மேற்கொண்டிருக்கிறது.

மின் கம்பங்கள் ஏற்கனவே நடப்பட்டு மின் கம்பிகளும் பொருத்தப்பட்டு விட்டன.

(ல-240)

# விபத்து மரணம்

கிளிநொச்சி, மே 31

நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றவர் முகம் கழுவச் சென்ற போது கிணற்றுள் தவறி விழுந்து மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் முறிகண்டிப் பகுதியில் நடந்தது.

அல்வாய் தெற்கு வாசியான பொன்னம்பலம் கெங்காதரன் (42 வயது) என்பவரே இவ்வாறு மரணத்தை தழுவிக் கொண்டார்.

கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

(ல-244)

# தற்கொலை

கிளிநொச்சி, மே 31

நீண்ட காலமாக ஆஸ்த்மா நோயினால் கஷ்டப்பட்டு வந்த பெண் ஒருவர், மனமுடைந்து கிருமிநாசனி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நடந்தது.

பெருமாள் நாகேஸ்வரி (வயது 24) என்பவரே இவ்வாறு மரணமானவர்.

கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேச மேயர் மரணம்:

# கொலைத் திட்டம் தெரிந்திருந்தும் பேசாமடந்தையாயிருந்தனர் அதிகாரிகள்

ஜெரூஸலம், மே 31

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேச நகர முதல்வர் படுகொலை பற்றி இஸ்ரவேலிய அதிகாரிகள் இருவர் முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்தனர். ஆயினும் அத்தகவலை வெளியிட அவர்கள் விரும்பவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சார்பில் ஆஜரான வக்கில்கள் ஜெரூஸலம் மாவட்ட நீதிமன்றத்தில் இப்படித் தெரிவித்தார்கள்.

தற்போது நிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் இந்த அதிகாரிகளின் பெயர் விவரம் நீதிமன்றத்தால் வெளியிடப்படவில்லை.

கைப்பற்றப்பட்ட அரபுக்கள் மீது யூதப் பயங்கரவாதக் குழு ஒன்று தாக்குதல் நடத்தியது. ஜோர்தான் மேற்கு நதிக்கரைப் பிரதேச நகரமான எல் பிறேயின் மேயர் அப்ராஹிம் டாவிலைப் படுகொலை செய்தது.

படுகொலைத் திட்டம் பற்றி முன்னரே, அறிந்து கொண்ட போதிலும் மக்களுடன் (பயங்கரவாதிகளுடனான) ஒருமைப்பாட்டு உணர்வு காரணமாக அதிகாரிகள் இருவர் அத்திட்டத்தை வெளியிடாது இருந்தார்கள் என்று வக்கில்கள் தெரிவித்தனர்.

நீதிமன்ற விசாரணை முடியும் வரை நிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் அந்த அதிகாரிகளின் பெயரை பத்திரிகைகள் வெளியிடக் கூடாது என்று நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்த விவகாரம் குறித்து முடிவு எடுக்கப்படும் என்று நீதிபதி சொன்னார்.

அரபுகளுக்கு எதிராக கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியது, திருட்டுத்தனமாக கண்ணிவெடிகளைக் கொண்டு சென்றது போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் யூதக் குடியிருப்பாளர்கள் பலர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

நோம் ஈஜென் என்ற யூதக் குடியிருப்பாளர் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். இவருக்கு கூடுதல் தண்டனையான 10 வருட சிறைத் தண்டனை கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ண)

## அரசாங்க அறிவித்தல்

### 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்

என். 528.

1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1)ஆம் பிரிவின்படி 1984ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்புகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்புகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| இடாப்புகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்படும் அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2. 1: தேர்தல்கள் அலுவலகம், கொழும்பு, தெஹிவளை — கல்கிசை மாநகர சபைப் பிரதேசங்கள் — இல. 100, ஹெவ்லொக் றோட், கொழும்பு-5. | இல. 1 — கொழும்பு தேர்தல் மாவட்டத்திற்குரிய சம்பூரணமான தேருநர் இடாப்பின் பிரதி. |
| 2. 2: மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்த தேர்தல் மாவட்டங்களுக்குரிய சம்பூரணமான தேருநர் இடாப்பின் பிரதி. |
| 2. 3: மாநகர சபையினதும், நகர சபையினதும் அலுவலகங்கள். | மாநகர சபைகள், நகர சபைகள் அடங்கிய பகுதியில் உள்ள தேருநர் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள். |
| 2. 4: ஒவ்வொரு கிராம சேவை அலுவலர்களின் அலுவலகம். | கிராம சேவை அலுவலர் பிரிவிற்குள்ளிருக்கும் எல்லா தேருநர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |

(கச்சேரியிருக்கும் ... தொரு பட்டினம், கொழும்பு

## இஸ்லாமிய அறிஞர் அவை கலைப்பு

இஸ்லாமாபாத், மே 31

பாகிஸ்தானில் சர்ச்சைக்குரிய இஸ்லாமிய அறிஞர் அவை நேற்று கலைக்கப்பட்டது. ஆயினும் அந்த அவையின் வழிகாட்டல் குறித்து ஜனாதிபதி சியா உல் ஹக் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

(ண)

துப்பாக்கிச் சமரில் 8 பாக். வீரர்கள் மரணம்; இதனையடுத்து

# காஷ்மீர் எல்லை: பாக். படை குவிப்பு

புதுடில்லி, மே 31

சர்ச்சைக்குரிய காஷ்மீர் எல்லைப்புறப் பகுதிகளில் பாகிஸ்தான் பெரும் எடுப்பில் படைகளைக் குவித்து வருகிறது. டாங்கிகள், பீரங்கிகள் பெரும் தொகையில் கொண்டுவந்து சேர்க்கப்படுகின்றன. இந்திய ஏஜன்ஸி செய்திகள் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தன.

எட்டு நாட்களுக்கு முன்னர் காஷ்மீரை அண்டியிருக்கும் இந்திய எல்லையில் இரு நாட்டுத் துருப்புகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் நடைபெற்றது.

இந்தத் துப்பாக்கிச் சண்டையில் எட்டு பாகிஸ்தானியத் துருப்பினர் கொல்லப்பட்டார்கள். இந்தியத் தரப்பிலும் இருவர் மாண்டார்கள்.

இந்தச் சம்பவத்தை அடுத்தே பாகிஸ்தான் படைகளைக் குவித்து வருகிறதென்று கூறப்படுகின்றது.

இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீர் பிராந்தியத்திற்குள் சுமார் 500 மீட்டர்வரை பாகிஸ்தானியத் துருப்புகள் ஊடுருவலை நடத்தின என்றும் —

இதனை அடுத்தே துப்பாக்கிச் சமர் நிகழ்ந்தது என்றும் ஏஜன்சி செய்தி தெரிவிக்கிறது. இந்தச் செய்தி அடிப்படையில் சரியானதே என்று உத்தியோக பூர்வ இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் எல்லையில் அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவை கூறின.

பெரும்பாலான சம்பவங்களில் பாகிஸ்தானியர்கள் இந்திய எல்லையைக் கடந்திருக்கிறார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்ச்சைக்குரிய காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியான ஆஸாத் காஷ்மீர் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. எஞ்சிய மூன்றில் இரண்டு பகுதிப் பிரதேசமான ஜம்மு — காஷ்மீர் இந்தியாவின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

1947 இல் சுதந்திரம் அடைந்தன் பின்னர் பாகிஸ்தானும், இந்தியாவும் மூன்று தடவை யுத்தம் நடத்தியிருக்கின்றன. இவற்றில் இரண்டு யுத்தங்கள் காஷ்மீர் விவகாரம் தொடர்பாகவே நடைபெற்றன.

இந்தியாவும், பாகிஸ்தானும் முழு காஷ்மீர் பிரதேசமும் தத்தமக்கே உரியன என்று கூறி வருகின்றன. காஷ்மீரைப் பிரிக்கும் எல்லையை அவை அங்கீகரிக்கவில்லை.

1949 ஆம் ஆண்டு முதல் அங்கு ஐ. நா. இராணுவ கண்காணிப்புப் பிரிவு நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் அமைதி காக்கும் பணி அதற்கு வழங்கப்படவில்லை. எல்லைமீறல் சம்பவங்கள் பற்றி மட்டும் அது அறிக்கைகளை வெளியிட முடியும்.

(ண)

## வேலையற்றோர் பட்டியலில் கறவைப் பசுக்கள்

சென்தியென், மே 31

வேலை இல்லாதவர்கள் பட்டியலில் இரண்டு கறவைப் பசுமாடுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மத்திய பிரான்ஸ் நகரமான சென்தியெனிலுள்ள பட்டியலிலேயே பசுமாடுகளும் இடம்பெற்றிருக்கின்றன.

கூடுதல் பால் உற்பத்திக்கு ஐரோப்பிய பொருளாதார சமூகம் கட்டுப்பாடு விதித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே பண்ணையாளர்கள் தமது கறவைப் பசுக்களையும் வேலை இல்லாதோர் பட்டியலில் பதிவு செய்திருக்கிறார்கள்.

இதனால் இந்தப் பசுக்களுக்கும் சேமநல உதவிப் பணம் கிடைக்க இருக்கிறது. (ண)

## விண்வெளி கப்பல்

மாஸ்கோ, மே 31

ரஷ்யாவின் சரக்கு விண்வெளிக் கப்பல் ஒன்று நேற்று சல்யூட் – 7 விண்கூடத்துடன் இணைந்து கொண்டது.

(ண)

# உலகச் செய்திகள்

தானிய ஏற்றுமதியை தடுத்து

## சட்டமறுப்பு போராட்டம் சீக்கியர் நடத்தத் திட்டம்


மட்டக்களப்பு மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

கோண இரும்பினாலும் தட்டை இரும்பினாலும் 100 துவிச்சக்கர வண்டிகள் நிறுத்திகள் செய்து தருவதாக முத்திரிக்கையிடப்பட்ட கேள்விகள் 15-06-84 பிற்பகல் 3-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். மீளளிக்கப்படும் பிணைப் பணம் ரூபா 50/வும் மீளளிப்புச் செய்யப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்திக் கேள்விப் படிவங்களை 12-06-84

அடங்கிய இடாப்பின் பாகங்கள்.

இருக்கும் ஏதாவ
பட்டினம், கொழும்பு
நகர சபை, தெஹிவளை – கல்
கிசை மாநகர சபைப் பிரதே
சங்கள் தவிர)

3. ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளரா யிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதாஎன்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் இடாப்பிலும், அல்லது கிராம சேவை அலுவலர் அலுவலகத்தில், அல்லது மாநகர சபை, அல்லது நகர சபை அலுவலகத்தில் குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

4. தேருநர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லையெனக் காணும் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரைக் கீழ்க்காணும் முறையில் இடுவித்துக் கொள்ளலாம்.

4. 1: இவ் அறிவித்தலோடிணைக்கப்பட்டிருக்கும் இணைப் படிவத்தில் 1984ஆம் ஆண்டு யூன் மாதம் 28ஆம் திகதி அன்றோ அல்லது அதற்குமுன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்வதன் மூலமும் —

4. 2: பதியப்படுதற்கான தகைமை பற்றி எல்லாத் தகவல்களையும் கணக்கெடுப்பாளர்களால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், இவ்வருடம் தேருநர் இடாப்புகள் திருத்தியமைத்தலின் பொருட்டு பதிவுக்குத் தகுதியுடையவர்களினதும் அல்லாதவரினதும் அல்லது இறந்து போனவர்களினதும் பெயர்களை விசாரித்தறிய ஒவ்வொரு வீட்டுக்கும் வரும் கணக்கெடுப்பாளரிடம் அவ்விதம் தகவல்களைக் கொடுத்தும் —

5. இடாப்புகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள எந்த அலுவலகத்திலும் விண்ணப்பப் பத்திரத்தின் பிரதிகள் கிடைக்கும்.

ஆர். கே. சந்திரானந்த த சில்வா,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் ஆணையாளரின் அலுவலகம்,
இல. 2, கேம்பிரிஜ் ரெறஸ்,
கொழும்பு — 7.
1984, மே மாதம் 23ஆம் திகதி.

## ஒரு வாக்காளராகப் பதியப்படுவதற்கான விண்ணப்பப் பத்திரம் — 1984.

* பதியும் அலுவலர்,
  தேர்தல்கள் அலுவலகம்,
  இல. 100, ஹெவ்லொக் ரோட்,
  கொழும்பு – 5.

* பதியும் அலுவலர்,
  கச்சேரி/தேர்தல்கள் அலுவலகம்,
  ......

...... ஆகிய நான் ...... தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

2. எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

2. 1: முழுப் பெயர்: ......

2. 2: முகவரி: ......

2. 3: வயது: பிறந்த திகதி: ......

2. 4: 1984ஆம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?
......

......
விண்ணப்பதாரியின் ஒப்பம்

தேதி: ......

* வேண்டாததெதுவோ அதை வெட்டி விடுக.

# சீக்கியர் நடத்தத் திட்டம்

புதுடில்லி, மே 31

பஞ்சாப்பில் சீக்கியர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் சட்டமறுப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

அகாலிதள் கட்சியே இதற்கான அழைப்பை விடுத்திருக்கிறது.

மாநிலத்தில் இருந்து தானியங்களைக் கப்பல் மூலம் ஏற்றிச் செல்வதைத் தடுப்பதற்கும் சீக்கியத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமைகளை அடுத்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி ராஷ்டிரபதி ஸயில் சிங்குடன் நேற்று சுமார் 105 நிமிட நேரம் ஆலோசனை நடத்தினர்.

சீக்கியர்களின் பிரதான அரசியல் கட்சியான அகாலிதள் சட்டமறுப்பு இயக்கத்தின் மூலம் மின்சார கட்டணங்களை செலுத்த மறுப்பது,

மாநிலத்தில் உற்பத்தியாகும் தானியங்கள் தனியாருக்கும், அரசுக்கும் விற்பனை செய்யப் படுவதைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது.

இந்தியாவின் நெல், கோதுமை உற்பத்தியில் பஞ்சாப் மாநிலம் பாதி இடத்தைப் பிடித்திருக்கிறது. ஆயினும் சட்ட மறுப்பு போராட்டத்தில் அரசின் விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட மாட்டா என்று விவசாய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

தானிய ஏற்றுமதியை தடுத்து நிறுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும் மிரட்டல், தீவைப்பு, நாசவேலை முயற்சிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி மாநில ஆளுநர் பி. டி. பண்டேயை மத்திய அரசு கேட்டிருக்கிறது.

(ண)

## அமெ. ராஜதந்திரி மீது தாக்குதல்

வாஷிங்டன், மே 31

ரஷ்ய இளைஞர் கூட்டமொன்று அமெரிக்க ராஜதந்திரி ஒருவரை லெனின் கிராட் நகரில் வைத்து பட்டப்பகலில் தாக்கியது.

இச்சம்பவம் குறித்து அமெரிக்கா ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

(ண–ந)

## கைக்குண்டுகள் பம்பாயில் மீட்பு

பம்பாய், மே 31

மகாராஷ்டிர தலைநகர் பம்பாயில் நேற்று 33 பெட்டிகள் நிறைய கைக்குண்டுகளும், அசிட் நிரப்பப்பட்ட பல்புகளும் கண்டுபிடிக்கப் பட்டன.

தற்போது பம்பாயில் நிலைமை மாமூலுக்குத் திரும்பி வருகிறது. கடந்த 12 நாள் இடம்பெற்ற கலவரங்களில் சுமார் 230 பேர் பலியானார்கள்.

கலவரங்களில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இந்துக்களும், முஸ்லிம்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

(ண)

## தங்கத்தின் விலை உயரலாம்

லண்டன், மே 31

இவ்வாண்டு தங்கத்தின் விலை உயரலாம் என்று "கோல்ட் 1984" என்ற வருடாந்த சஞ்சிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

நகை உற்பத்தியாளர்களின் தங்கத்தின் கேள்வி அதிகரிப்பும், டாலர் பெறுமதி இறக்கமும் இதற்குக் காரணமாக அமையலாம் என்று சஞ்சிகை கூறுகிறது.

அமெரிக்காவின் கூடுதல் வட்டி விகிதமும், டாலரின் செல்வாக்கும் தங்கச் சந்தையில் முக்கிய இடத்தை வகிக்கலாம் என்றும் அது தெரிவித்திருக்கின்றது.

லண்டனில் நேற்று ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 384.25 டாலராக இருந்தது. ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் தங்க நகைகளுக்கு தற்போது கூடுதல் மவுசு ஏற்பட்டிருக்கிறது.

(ண)


ளுல் ஏற்றுக் கொள்ளப்படும். மீளளிக்கப்படும் பிணைப் பணம் ரூபா 50/வும் மீளளிப்புச் செய்யப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/–ம் செலுத்திக் கேள்விப் படிவங்களை 12–06–84 பி. ப. 3–00 மணிவரை மாநகர அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய விவரங்களை அலுவலக நேரத்தில் மராமத்து அதிபரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

விளக்கம்:— கோண இரும்பு — ANGLE IRON
தட்டை இரும்பு — FLAT IRON

(பெனடிக் தாசீசியஸ்)
மாநகர ஆணையாளர்,
மட்டக்களப்பு.

மாநகர அலுவலகம்,
மட்டக்களப்பு. 24–05–84.



ஜூன் 1ஆம் திகதி முதல்

பொரலஸ்கமுவ

தொலைபேசி

பாவனையாளர்கள்

கொழும்பு இலக்கங்களைப் பெறுவர்.

கொழும்பு பாவனையாளர்கள் மேற்படி நகர பாவனையாளர்களுடன் தொடர்பு கொள்ள, புதிய இலக்கங்களையே பயன்படுத்த வேண்டும்.

ஏனைய நேரடி தொலைபேசி பரிவர்த்தனை நிலைய பாவனையாளர்கள், பொரலஸ்கமுவையுடன் தொடர்பு கொள்ள, "01" குறி எண்ணைச் சுழற்றி, அதன் பின் புதிய இலக்கங்களைச் சுழற்ற வேண்டும்.

தற்போதைய பொரலஸ்கமுவ இலக்கங்களுடன், "722" ஆகிய மூன்று எண்களை முன்னால் சேர்த்து புதிய கொழும்பு இலக்கங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

[உதாரணம்: பொரலஸ்கமுவ 234 என்பது, கொழும்பு 722234 இலக்கமாக மாற்றப்படும்].

ஏ. சண்முகராஜா,
தொலைபேசிகள் இயக்குநர்.

# நன்மைகள் பூத்துக் குலுங்கும் ரமழான்

— எம். ஏ. சீ. குலாம் முஹம்மது —

அகில உலக மக்களுக்கெல்லாம் நேர்வழியாக அருளப்பட்ட வான்மறை குர்ஆன் இறக்கப்பட்ட சிறப்புக்கும் மேன்மைக்குமுரிய மாதம் ரமழான் மாதமாகும்.

அல்லாஹ்வையும், நபி முஹம்மது ரசூல் (ஸல்) அவர்களையும் இனிய நினைவாகக் கொண்டு வாழும் மக்களுக்கு ஒரு சிறந்த பயிற்சி பாசறையையும், வரண்டு வழி தவறிச் செல்லும் உள்ளங்களுக்குத் திருந்தி வாழ்வதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பத்தையும் இப்புனித ரமழான் அளிக்கின்றது.

நோன்பு ஒவ்வொரு தனி மனித உள்ளத்திலும் இறையச்சம், இறைவனைப் பெருமைப்படுத்தல், இறைவனுக்கு நன்றி செலுத்தல் ஆகிய உணர்வுகளை ஏற்படுத்துகிறது.

அவனது வாழ்க்கைப் பாதைக்கு தேவையான சாதனங்களை அவனுக்கு அளித்து அவனை ஒரு உண்மையான இறைவனின் அடிமையாகவும் மாற்றி அமைத்து விடுகின்றது.

அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிமையாக இருக்க வேண்டும் என்ற சுதந்திரமும், வலிமையும் மிக்க உணர்வை முழு சமுதாயத்திலும் ஏற்படுத்தி அச்சமூகத்தை நன்மைகள் ஓங்கச் செய்யும் வகையிலும், தீமைகளை அழிக்கும் வகையிலும் வழி நடாத்தி புனித மிக்க சமூகமாக மாற்றி அமைத்து விடுகின்றது.

வான்மறை பின்வருமாறு இயம்புகின்றது.

"விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. (அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்".

அல்குர்ஆன் (2 அத்தியாயம் 183 வசனம்).

ரமழான் ஒரு போர்க்களம். அதில் இறைவிருப்பத்துக்கும், மனோ இச்சைக்கும் இடையே போர் நடைபெறுகின்றது. ஈமானுக்கும், ஈமானற்ற தன்மைக்கும் இடையே பரீட்சை நடைபெறுகின்றது.

இப்போராட்டத்தில் இறை நம்பிக்கையாளன் (விசுவாசி) ஷைத்தானின் சக்திகள் அனைத்

யும் இப்புனித ரமழானில் தான் நினைவில் காண்கின்றோம். அங்கு இஸ்லாத்துக்கும் ஜாஹிலியத்துக்கும் இடையே, சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் இடையே உக்கிரமான போர் மூண்டது.

இன்னும் மக்காவெற்றி, தபூக் யுத்தம், ஸ்பெயின்போர், சூயேஸ் போர் முதலியனவும் தியாகமிகு ரமழானிலேயே நடைபெற்று வெற்றி கண்ட யுத்தங்களாகும்.

நோன்பின் பசியும், தாகமும் மனிதனை பலவீனப்படுத்தாது. மாறாக, அது ஆத்மீக உணர்வையும், ஆரோக்கியத்தையும் அளித்து அவனுக்குத் திடமான உறுதியையும், வீரத்தையும் கொடுத்து வெற்றி கொள்ளச் செய்திருக்கின்றது, என்பதை இதனால் உணர முடிகின்றது.

எனவே புனித ரமழானில் நாம் பெறும் பயிற்சி எம்மை அனைத்து ஜாஹிலியத்துகளுக்கும் எதிராகப் போராடத் தூண்டி இஸ்லாத்தை நிலைநாட்டத் தொடர்ந்து பொறுமையுடன் உழைக்கக்கூடிய உண்மை விசுவாசியாக மாற்றி அமைக்க துணை செய்ய வேண்டும்.

நாம் விழிப்புற்று எம்மை

இறையச்சம் போன்ற இறைவனிடத்தில் மிகவும் பெறுமதி வாய்ந்த உயர்ந்த நற்பண்புகளை நிலைபெறச் செய்திட வருகின்ற ரமழானில் நாம் எம்மை பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

குர்ஆன் எமது நிலைமையை தெளிவாக்குகின்றது.

"அல்லாஹ், விசுவாசிகளுடைய உயிர்களையும், பொருள்களையும் நிச்சயமாக, அவர்களுக்குச் சுவனபதி தருவதாக (க் கூறி) மெய்யாகவே விலைக்கு வாங்கிக் கொண்டான்......".

(9 அத்தியாயம் 111 வசனம்)

ஆரம்ப கால வரலாற்றில் பத்ருறுத் தோழர்களுக்கு இருந்த ஈமானின் உறுதியும், தியாகமும், உணர்ச்சியும் இன்றும் தேவைப்படுகின்றது. அதைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்பை இப் புனித ரமழான் எமக்கு அளிக்கின்றது.

அதற்காக வேண்டி வல்ல நாயனான அல்லாஹ்வுடன் நாம் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே நாம் இயன்றளவு குர்ஆனுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள முயல வேண்டும். நபி முஹம்மது (ஸல்) அவர்களுடைய தஃபாவின் ஒவ்வொரு கட்டத்தையும் குர்ஆன் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

புனிதமிகு ரமழானில் குர்ஆனை நன்கு திருத்தமாக அதன் பொருள் உணர்ந்து இறையச்சத்துடன் மிகக் கண்ணியமான முறையில் ஓத வேண்டும். குர்ஆனைப் பொருள் அறிந்து ஓதுவதே மிகவும் சிறப்புடையதாகும்.

அருள் மறை பின்வருமாறு முழங்குகின்றது.

(மனிதர்களே சிந்தித்து ஆராய்ந்து) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இ(ந்த)க் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் எவரும் உண்டோ?.

(54 அத்தியாயம் 17 வசனம்)

(நபியே!) நாம் உம்மீது அருளியிருக்கும் இவ்வேதம் மிக்க பாக்கியம் உடையதாகும். அறிவுடையோர் இதன் வசனங்களைச் சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக! (38 அத்தி 29 வசனம்).


ரமழானில் அல்லாஹ்வுடன் தொடர்புகளை மேலும் கூட்டிக் கொள்ள மேலதிகமாக சுன்னத்தான தொழுகைகள் திக்ருகள், தானதருமங்கள், பாவ மன்னிப்பு, பள்ளியில் தரித்தல், தன்னையே தான் சுய விசாரணை செய்து பாவங்களில் இருந்து விலகி இருத்தல் போன்ற நல்ல செயல்களைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய அறிவை தெளிவாக்கக் கூடிய சிறந்த நூல்களை அதிகமாக படிப்பதற்கும் மிகுந்த ஆர்வம் காட்ட வேண்டும்.

புனிதமிகு ரமழானைக் கொண்டு எம்மை நாம் உண்மையான பரிசுத்தவான்களாக மாற்றி அமைக்க வேண்டும்.

யாஅல்லாஹ் நீயே யாவற்றுக்கும் போதுமானவன். உன்னிடமே திரும்பியும் நிச்சயமாக நாம் மீளுவோம்.

நீயே எங்களுக்கு நேரான வழியை காட்டிட போதுமானவன். நீயே மிக்க அறிந்தோனும் ஞானமுடையோனுமாயிருக்கின்ருன். சர்வ புகழும் உனக்கே உரித்தாகட்டும். அல்ஹம்துலில்லாஹ்.



பிங்கிரிய தொகுதியில் ஆரிகாமத்துக்கு அருகில் எதுன்கஹகொடுவ முஸ்லிம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஜும்ஆப் பள்ளிவாசலின் அழகிய தோற்றத்தைப் படத்திற் காணலாம்.

இந்தப் பள்ளிவாசல் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவில் மௌலவிமார்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படம்: குருநாகல் தினபதி நிருபர் விசிநவ உதுமான் (138)

## தினபதி இஸ்லாமிய பூங்கா

தயாரிப்பு: எப்.எம். பைரூஸ்

## வாசகர் கவனத்துக்கு...

இஸ்லாமிய பூங்காவுக்கு விடயதானங்களை அனுப்புவோர் ஆதாரங்களுடன் அவற்றை அனுப்ப வேண்டும்.

## எட்டிலிருந்து ஏற்றதோர் படிப்பினை...

ஜனநாயகம் பற்றியும், மனித உரிமை பற்றியும் இன்று பேசாதவர்களே உலகில் இல்லையெனலாம். சர்வாதிகாரியிலிருந்து சாதாரண மனிதன் வரையிலே இதுபற்றிப் பேசுவது இன்றைய உலகத்தின் நாகரிகமாகக் கருதப்படுகிறது.

ஆனால், இதுபற்றி மனிதன் சிந்திக்க முனையாத காலத்திலே, பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னே நடந்த சம்பவம் இது.

ஓலை வேய்ந்த பள்ளியிலே, வள்ளல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களோடு அமர்ந்திருந்தார்கள். அப்போது அங்கே வந்த கந்தைத் துணிகளை அணிந்திருந்த மனிதர் ஒருவர் சபையில் அமராமல் ஒரு மூலையிலே நின்று கொண்டிருந்தார்.

இதனைக் கண்ட நபிகளார் (ஸல்) அவர்கள், அந்த மனிதரை அழைத்தார்கள். அவர் வருவதற்கு தயங்கினார்.

சபையிலிருந்த அருமைத் தோழர் ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அந்த மனிதரோ மிகவும் ஏழை. தங்களிடம் வருவதற்கு அவர் சிறிது அச்சப்படுவதாகத் தோன்றுகிறது என்று கூறினார்.

இதனைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் உடனே எழுந்து, அந்த மனிதரிடம் சென்று அவரை அணைத்துக் கொண்டே சபைக்குக் கொண்டு வந்து உட்கார வைத்தார்கள்.

அந்த மனிதர் மிக பயந்து கொண்டே சொன்னார்: "பெருமானார் அவர்களே, "நான் மிகவும் ஏழை."

பெருமானார் (ஸல்) அவர்களின் திருவாயிலிருந்து உணர்ச்சியோடு இவ்வாறு சொற்கள் வெளிவந்தன.

"நானென்ன அரசனா? அன்றி சர்வாதிகாரியா? நானும் உம்மைப் போன்ற ஏழைதான்.

அதுவும், காய்ந்த ரொட்டியையும், பேரீத்தம் பழத்தையும் தின்று உயிர் வாழ்ந்த ஒரு ஏழைப் பெண்ணின் மகனாகப் பிறந்த ஏழைதான் நான்.

"இறைவன் அருளுவதை உங்களுக்கெல்லாம் அறிவிக்கின்றேன். இதைத் தவிர, உங்களில் யாரை விடவும் நான் உயர்ந்தவன் அல்லன்.

— இப்னு பதூர்தீன்

# மதீனா நகரில்

பெறுகின்றது.

இப்போராட்டத்தில் இறை நம்பிக்கையாளன் (விசுவாசி) ஷைத்தானின் சக்திகள் அனைத்தையும் வீழ்த்தி தன்னை அல்லாஹ்வுக்கு கீழ்ப்பட்டு நடக்கக் கூடிய அடியானாக மாற்றி அமைத்துக் கொள்கின்றான்.

வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கு இபாதத்து செய்து வாழ்கின்ற தன்மையை வளர்த்துக் கொள்கின்றான். ரமழானில் தான் பெற்ற உறுதியான ஈமானையும், இறையச்சத்தையும் ஏந்திக் கொண்டு அடுத்த ஆண்டுக்கான தனது வாழ்க்கைப் பயணத்தை தொடர்கின்றான்.

இஸ்லாமிய வரலாற்றில் நடைபெற்ற மிக முக்கிய யுத்தமான பத்றுப் போர்க்களத்தை ... விசுவாசியாக மாற்றி அமைக்க துணை செய்ய வேண்டும்.

நாம் விழிப்புற்று எம்மை சூழ்ந்துள்ள தீமைகளுக்கு எதிராகப் போராடுகின்ற ஆத்மிக ஆரோக்கியத்தையும், வலிமையையும் அளிக்க வேண்டும்.

அது தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் நிலைத்திருந்து குன்று ஒளியாக எமது உள்ளத்தில் வீற்று எமது தீனை நிலை நாட்டும் உயர்ந்த பணிக்கான பாதையைத் தெளிவாக காட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

தீமையை எதிர்க்கும் உயர்ந்த பண்பு, தியாகம், பொறுமை, தன்னலம் மறுத்தல் மன்னிப்பு, சகோதரத்துவம், இறைதிருப்தி,

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1404 ஷஃபான் பிறை 30

## முஸ்லிம் வாலிபர்களின் பணி

இன்றைய காலகட்டத்தில் தேசிய ரீதியில், சமூக மட்டத்தில் உழைப்பதற்கு முஸ்லிம் வாலிபர்கள் முன்வர வேண்டும்.

அமைச்சர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் முஸ்லிம் இளைய தலைமுறையினருக்கு இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

வரவேற்க வேண்டிய அழைப்பு. அதில் சந்தேகம் இல்லை.

முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவராகவும் இருக்கிறார் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார். முஸ்லிம் வாலிபர்கள் ஒன்றுபட்டு சமூக, சமய சன்மார்க்கப் பணிகளில் ஈடுபட்டு உழைக்க வேண்டுமென்றும் அவர் இளைஞர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்.

இளைஞர்கள் தாம் சமுதாயத்தின் ஜீவநாடி. எதிர் கால சந்ததியின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றவர்களும் அவர்களே.

குறிப்பாக முஸ்லிம் வாலிபர்கள் தமது சமுதாய மேம்பாட்டுக்கு நல்ல திட்டங்களை வகுத்து சேவை புரிய வேண்டும். இன்றைய முக்கிய தேவை இதுதான்.

முஸ்லிம்கள் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர். முஸ்லிம்கள் மத்தியில் தான் ஏழைகள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

அவர்களின் கதையோ கண்ணீரும் கம்பலையும் நிறைந்தது. தமது அன்றாட மார்க்கக் கடமைகளைக் கூடச் செவ்வனே நிறைவேற்ற போதிய வசதியற்றவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

இந்தப் பரிதாப நிலையை நீக்குவதற்கு இஸ்லாமிய உணர்வும், சமுதாயப்பற்றும் மிக்க முஸ்லிம் வாலிபர்கள் முன்வர வேண்டும்.

இஸ்லாமியர்களின் ஆரம்பகால வரலாற்றில் கண்ட நேரிய முஸ்லிம் வாலிபர் பரம்பரை மீண்டும் உருவாகினால்தான் சிறப்பான பணியாற்ற முடியும்.

சமுதாயப் பணியில் ஈடுபடும் முஸ்லிம் வாலிபர்களுக்கு அல்லாஹுத்தஆலா வலிமையையும், ஆளுமையையும் கொடுப்பானாக! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!

இஸ்லாமிய பூங்காவுக்கு விடயதானங்களை அனுப்புவோர் ஆதாரங்களுடன் அவற்றை அனுப்ப வேண்டும்.

திருமறையின் ஓர் ஆயத்தை எழுதும் போது அத்தியாயம், சூரா. இலக்கம் போன்றவற்றையும் — ஹதீதுகள் என்று வரும் போது திரட்டியவர், உரைத்தவர், தொகுத்தவர் ஆகியோரின் பெயர்கள், எங்கிருந்து பெறப்பட்டன என்பன போன்ற விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

தயாரிப்பாளர்,
இஸ்லாமிய பூங்கா.

# நல்லுபதேசங்கள்

* எனது உயிரைத் தன்வசம் வைத்திருப்பவன் மீது சத்தியமாக தனக்கெனத் தான் விரும்பும் ஒன்றினைத் தனது சகோதரனுக்காக விரும்பும் வரை உங்களில் எவரும் பூரண (ஈமான்) விசுவாசியாக மாட்டான்.

— புஹாரி, முஸ்லிம் —

* எவருடைய தீங்குகளை விட்டு அவருடைய அண்டை வீட்டார் பாதுகாப்புப் பெற வில்லையோ, அவர் சுவர்க்கம் புக மாட்டார்.

— முஸ்லிம் —

* தனது தந்தையையும், தனது மக்களையும் மற்றும் உலகில் உள்ள யாவற்றையும் விட என்னை அதிகமாய் நேசிக்கும் வரை உங்களில் எவரும் பூரணமான விசுவாசம் பூண்டவராக மாட்டார்.

— புஹாரி, முஸ்லிம் —

* நீ ஒரு பொருளை மிக அதிகமாக நேசிப்பது உன்னை அது குருடனாகவோ, செவிடனாகவோ ஆக்கிவிடும்.

— அபூ தாவூத் —

* திருக்குர்ஆனைப் பற்றி வீண் தர்க்கம் செய்வது விசுவாசமின்மையாகும்.

— அபூ தாவூத் —

* ஒரு சமூகத்தின் சங்கைக்குரியவர்கள் உங்களிடம் வந்தால் நீங்கள், அவர்களுக்கு மரியாதை செய்யுங்கள்.

— முஸ்லிம் —

* ஒவ்வொரு பொருளுக்கும் சகாத் உண்டு, உடலுக்கு சகாத்தானது நோன்பாகும்.

— இபுனுமாஜா. —

தொகுப்பு:
அப்துல் காதர் உம்மா
காயல்பட்டினம்.

# பொன்மொழிப் பேழை

★ நீ உலகுக்கு வந்தது முதல் உலகம் பின் சென்று கொண்டிருக்கிறது. மறுமை முன்னோக்கியவாறே இருக்கிறது. ஆனால் நீயோ மறுமையைத் தூரமாக எண்ணுகிறாய்.

★ இறந்தவர்களின் சமூகத்துக்குச் செல். வீணான விழாக்களுக்குச் செல்லாதே. ஏனென்றால் முந்தியது மறுமையை நினைவூட்டும். பிந்தியது உலகத்தை நினைவூட்டும்.

★ மௌனமாக இருப்பதனால் கவலை கொள்ளாதே. பேசுவது வெள்ளி என்றால் மௌனமாக இருப்பது தங்கமாகும்.

★ மகனே! அல்லாஹ்வை அஞ்சுவதை வெளியில் காட்டிக் கொள்ளாதே. அதனால் உனக்கு மக்கள் மரியாதை செய்யத் தொடங்கி விடுவர்.

அதுவே பொறுமைக்கு வித்தாக அமையும்.

★ ஒரு பெரும் பாறையை நகர்த்துவதை விட விளங்காத மனிதனுக்கு விளங்க வைப்பது மிகக் கடினம்.

★ உலகம் ஓர் ஆழ்கடல். அதில் பலர் மூழ்கி மாண்டுவிட்டனர். அதில் நீ இறை அச்சத்தைக் கப்பலாக்கிக் கொள்.

இறை நம்பிக்கையை அதிலிருக்கும் (கப்பலில் இருக்கும்) பொருட்களாக ஆக்கிக் கொள்.

- ஹஸரத் லுக்மானுல் ஹ்கீம் (ரஹ்) அவர்கள் தம்முடைய மகனுக்குக் கூறிய அறிவுரைகளே இவை -

தொகுப்பு: ஜே. எம். நளீம், கொழும்பு.

# புனித நோன்பு

மதீனாவில் றமழான் மாதம் நெருங்கி விட்டால் திடீர் கடைகளை அமைத்து, கூடாரங்களையும் அடித்து விதம் விதமான சாப்பாட்டுக் கடைகளும் திறக்கப்படுகின்றன.

விசேஷமான சாப்பாட்டு வகைகளும், விதம்விதமான பழ வகைகளும் விற்பனை செய்யப்படும்.

இவை இலங்கையில் திருவிழாக் காலங்களில் அமைக்கப்படும் திடீர்க் கடைகளைப் போன்றிருக்கும். இக் கடைகளில் நம் நாட்டு முஸ்லிம்கள் நோன்பு காலத்தில் விரும்பி சாப்பிடும் பலவிதமான சாப்பாட்டு வகைகளும் கிடைக்கும்.

குறிப்பாக சேமியா, சவ்வரிசி, கடல்பாசி ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட இனிப்புக் கஞ்சிகளும் மற்றும் பலவிதமான பழங்களால் தயாரிக்கப்பட்ட ஜூஸ் வகைகளும், பெட்டிஷ், சம்ஸா, வகைகள் போன்ற தின்பண்டங்களும் கிடைக்கும்.

நோன்பு மாதம் முடியும் வரை இங்கு இரவு பகலாகவும், பகல் இரவாகவும் மாறிவிடும். எல்லா முக்கியமான கருமங்களும் இரவில்தான் நடக்கும்.

இங்கு தொழில் புரியும் பெரிய, பெரிய நிறுவனங்களின் வேலைகளும் 75 வீதம் இரவில் தான் நடக்கும். 25 வீதமான முக்கிய வேலைகள், மட்டுமே பகல் நேரத்தில் நடைபெறும். அதுவும் காலை 5.00 மணி முதல் பகல் 11.00 மணிவரையிலுமே. இருப்பினும் முழுநாள் ஊதியம் கிடைக்கும்.

இங்கு நோன்பு நோற்கும் நேரம் அதிகமானதே. சஹர் அதிகாலையில் 4.30 மணிக்கு முடிவடைகின்றது. நோன்பு திறக்கும் நேரம் மாலை 7.20. மாலை 6 மணிவரைக்கும் மிகவும் கடுமையான வெய்யிலாகவே இருக்கும்.

விசேஷமாக நோன்பு காலங்களில் நோன்பாளிகளுக்கு நோன்பு திறப்பதற்கு மதீனா வாழ் அறபு மக்கள் விசேஷ கவனம் எடுத்து எல்லா வகையிலும் உதவிகளைச் செய்வார்கள்.

ஒவ்வொருவரும் நோன்பாளிகளுக்கு நோன்பு திறக்கும் நேரத்தில் ஏதாவது உதவ வேண்டுமென்பதில் போட்டி போட்டுக் கொண்டு முன்நிற்பர். நன்மைகளைக் கொள்ளையடிப்பதற்காக வேண்டி இவர்கள் இவ்விதம் நடந்து கொள்வதைக் காணலாம்.

மதீனாவில் அமைந்திருக்கும் "மஸ்ஜிதுல் நபவி"யில் அஸர் தொழுகை மாலை 4.30 மணிக்கு எல்லாம் முடிவடைந்து விடும். தொழுகை முடிந்தவுடனே பள்ளியின் உள்ளே நோன்பு திறப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கி விடுவார்கள்.

முதலில் தண்ணீர் ஒழுங்குகள் செய்யப்படும். குறிப்பாக நோன்பு திறப்பதற்காகப் புனித மக்காவிலிருந்து "ஸம்ஸம்" தண்ணீர் பெரிய பவுசர்களில் கொண்டு வரப்பட்டு பள்ளியின் வெளிப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும்.

வசதி படைத்த தனவந்தர்கள் 300 மைல்களுக்கு அப்பால் இருக்கும் புனித மக்காவிலிருந்து நோன்பாளிகளுக்கு ஸம்ஸம் தண்ணீர் கொண்டு வந்து தருவார்கள். நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்வதில் அவர்கள் முன்னணியில் நிற்கின்றனர். நன்மைகளைக் கொள்ளை கொள்ளும் மாதமும் ரம்ழான்தான்.

பள்ளியின் வெளிப்புறத்தில் அஸர் தொழுகைக்குப் பின் பேக்கரிச் சொந்தக்காரர்கள் பாண், பிஸ்கட் போன்றவைகளைக் கொண்டுவந்து பங்கீடு செய்வர்.

பள்ளியின் உள்ளே நோன்பு திறக்கும் நேரத்தில் நோன்பாளிகளுக்கு மதீனா வாசிகள் பலவிதமான உணவு வகைகளையும், பழவகைகளையும், சர்பத் வகைகளையும் வழங்குவர்.

கீழே விரித்து உட்காருவதற்கு பெரிய றப்பர் சீட்டுகளை இவர்கள் கொண்டு வருவர். இவர்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுவார்கள்.

நோன்பாளிகளோ எந்தப் பக்கம் இருந்து நோன்பு திறப்பதென்று திண்டாடுவார்கள்.

நோன்பு காலத்தில் குழந்தைகள் முதல் பெரியோர் வரை எவரும் இரவில் தூங்க மாட்டார்கள். மதீனா நகரில் இந்த 30 இரவுகளும் விழாக் கோலம் பூண்டே காட்சி தரும்.

இரவில் "தராவீஹ்" தொழுகைக்குப் பின்பு பூந்தோட்டங்களிலும், திறந்த வெளிகளிலும் குடும்பம் குடும்பமாகச் சென்று கூடியிருப்பதையும் தொழுகை நேரங்கள் வரும்பொழுது அங்கேயே தொழுது கொண்டு சந்தோஷமாக இருப்பதையும் காணலாம்.

சில குடும்பங்கள் ஸஹர் நேரச் சாப்பாட்டையும், சுபஹ் நேரத் தொழுகையையும் முடித்துக் கொண்டுதான் தத்தம் வீடுகளுக்குச் செல்வார்கள். பகல் நேரங்களில் அஸர் தொழுகை நேரம் வரும்வரை வீதிகள் வெறிச்சோடியே கிடக்கும். சில கம்பனிகளின் வாகனங்களை மட்டுமே பாதைகளில் காணமுடியும்.

மற்றும் சிலர் போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ள சுத்தமான தண்ணீர் போத்தல்களைப் பங்கிடுவர். பேரீச்சந் தோப்புச் சொந்தக்காரர்கள் பல வகையான பேரீச்சம் பழங்களைக் கொண்டுவந்து பங்கிடுவர்.

இங்கு நோன்பு காலத்தில் தான் பேரீச்சம் பழம் அறுவடைக் காலம் ஆரம்பமாகிறது. ஆகவே மரத்திலிருந்து உடனுக்குடன் பறித்த பழங்களையே பங்கிடுவார்கள். இது உண்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும்.

அத்தோடு இங்கு வேலை செய்யும் பல்லாயிரக் கணக்கான வெளிநாட்டு மக்களும் தங்களால் முடிந்தவைகளை நோன்பாளிகளுக்கு வழங்கி நன்மையைத் தேடிக் கொள்கின்றார்கள்.

குறிப்பாக பாகிஸ்தானிய மக்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து அவர்கள் தயாரிக்கும் உணவு வகைகளையும், சர்பத் வகைகளையும் பங்கிடுவர். இவைகள் அனைத்தும் பள்ளிக்கு வெளியேயுள்ள மண்டபங்களில் நடைபெறும்.

மதீனா "கூபா" என்றழைக்கப்படும் பகுதியில்தான் (சேகள்) பணம் படைத்த செல்வந்தர்கள் நிறைய வாழ்கின்றார்கள். கொழும்பு நகரில் கறுவாக் காட்டுப் பகுதியைப் போன்ற இடம் இது. நள்ளிரவு 12 மணியாகியவுடன் ஸஹர் நேரச் சாப்பாடு பல வீடுகளிலிருந்து கொண்டு வரப்படும். இரவு 2.30 மணிவரையிலும் சாப்பாடு வந்து கொண்டேயிருக்கும்.

இங்கும் சஹர் நேரத்தையும், நோன்பு திறக்கும் நேரத்தை யும் பீரங்கி மூலம் குண்டு வெடி வைத்து அறிவிக்கின்றார்கள்.

மதீனா நகரில் றமழான் மாதம் விசேடம்தான்.

— அல்ஹாஜ் எம்.எச்.எம். அபூதாஹிர் —

## வானொலி

1—6—1984

காலை —

5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப் பாடல்கள் — சீர்காழி எஸ். திருஞான சம்பந்தம்
6.00 சைவ நற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 தலையே நீ வணங்காய்
7.30 மாகாணச் செய்திகள்
7.35 நாதஸ்வரம் — கோட்டூர் ராஜரத்தினம்பிள்ளை வீருசாமிப்பிள்ளை
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை —

6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 ஞானமிர்தம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்

இரவு —

8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 இல்லறஜோதி
8.40 நாட்டுப் பாடல்
8.45 பேச்சு — பண்டைய செய்யுட் பாணியில் எழுந்த 20 ஆம் நூற்றுண்டுக் கவிதைகள். கலாநிதி. பொ. பூலோகசிங்கம்.
9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப் பாடல்கள்
9.45 தாளவாத்தியக் கச்சேரி— ஈஸ்வரசங்கர்
10.15 பக்திப் பாடல்கள்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 நோ யுவர் கண்ட்ரீ
5.35 "காயனு"
6.00 விளையாட்டுப் பயிற்சி
6.30 "திரென எஹா"
6.55 செய்திகள் — தமிழ்
7.15 வின்டர் ஒலிம்பிக்ஸ்
7.45 வனவிலங்குகள் — விவரணச் சித்திரம்
8.15 செய்திகள் — சிங்களம்
8.35 பியூசர் அட்ரக்சன்ஸ்
9.05 உதைபந்தாட்டம்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 உதைபந்தாட்டம் (தொடர்ச்சி)
10.30 உலகச் செய்திகள்

### ஐ. டி. என்.

6.01 புட்பால் மேட் இன் ஜேர்மனி
7.00 "கீததாரு"
7.30 நகைச்சுவை
8.00 சயிட் அன்ட் சவுன்ட்
9.00 பயனிக் வுமன்

# கிராமப்புற வீரர்களுக்கு உரிய இடம்

## பிரதி பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்து

கண்டி, மே 31

"சர்வதேச விளையாட்டரங்கில் இலங்கை வீரர்களை பங்கு பெறச் செய்ய நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் கூடுதல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் கிராமப் புறங்களில் இலைமறை காய் போன்று இருக்கும் விளையாட்டு வீரர்களுக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டியது எமது கடமை ஆகும்".

இவ்வாறு கூறினர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ரீ. பீ. வேரப்பிட்டிய.

கண்டி வத்தேகம தமிழ் வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி வத்தேகம நகர சபை விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த விளையாட்டுப் போட்டியை வத்தேகம தமிழ் வட்டாரக் கல்வி அதிகாரி ஜனுப் ஐ. எம். தாஹிர் தலைமையிலான குழு ஏற்பாடு செய்திருந்தது.

கண்டிப் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. டீ. எஸ். இத்தமல்கொட, கல்வி அதிகாரி திரு. கே. இராசையா, கல்வி அதிகாரி அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ஹஸன், பிரபல சமூகநல சேவையாளரும், வர்த்தகருமான அல்ஹாஜ் எம். ரீ. எம். றஷீத் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பிரதி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"கண்டி அம்பிட்டியாவில் இருந்து சர்வதேச விளையாட்டுப் போட்டியில் ஒரு வீரர் கலந்து கொண்டு நாட்டுக்குப் பெருமையை ஈட்டித் தந்தார். மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்து இவ்வாறன வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் மூலம் இந்த உயரிய நோக்கத்தை அடைய நன்கு முடியும். தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

கிரிக்கெட் ஆட்டத்தில் நமது நாடு சர்வதேச அந்தஸ்தை வகிக்கின்றது. இத்துறைக்கு நாம் முக்கிய இடம் அளிக்க வேண்டும்.

இதன் பொருட்டுத் தேவைப்பட்டது பயிற்சியே. தமிழ்ப் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் அவை காட்டி வரும் ஆர்வம் அதிகரிக்க வேண்டும்.

எனது தொகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் அனைத்தும் இப்பொழுது நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் அபிவிருத்திக்கு மேலும் உதவுமாறு நான் அமைச்சர் திரு. தொண்டமானை வேண்டியிருக்கிறேன்.

தமிழ்ப் பாடசாலைகளுக்குத் தேவைப்படும் கட்டட வசதிகளையும், ஆசிரியர் பற்றுக் குறையை நிவர்த்தி செய்யுமாறு நான் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளேன்.

இப்படி அவர் மேலும் கூறினர். இந்த விளையாட்டுப் போட்டியில் திரு. இத்தமல்கொட, திரு. டி. ஜெயசிங் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினர்.

(ந—105)

## விளையாட்டுப் பகுதி

# மேற்கிந்திய அணி

4 விக்கட்) ஆகியோர் கிளமோர்கன் அணியை குறைந்த ஓட்டங்களுக்கு வெளியேற்ற பெரிதும்

## நாலாந்தா ரகரில் வெற்றி

கொழும்பு, ஜூன் 1

நாலந்தாக் கல்லூரி ரகர் அணிக்கும், டி. எஸ். சேனநாயக்க மகா வித்தியாலய அணியின் ரகர் அணிக்குமிடையே கெம்பல் பூங்காவில் நடைபெற்ற ரகர் போட்டியில் நாலாந்தாக் கல்லூரி அணி 18 — 0 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 12 — 0 என்ற நிலையில் நாலந்தாக் கல்லூரி அணி முன்னணியில் நின்றது.

ரோஹித திரிவா விதாரன, அஜித் சில்வா, டி. ஏபாரச்சி, நிஷாந்த ராஜபக்ஸ ஆகியோர் நாலந்தா அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தன.

துஷாந்த சமரசேகர இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளுக்கிடையிலான போட்டியில் நாலந்தா அணி 16—0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

# மட்டக்களப்பில் சாரணர்கள் பயிற்சி முகாம்

வவுணதீவு, மே 31

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை சாரணர்களுக்கான பயிற்சி முகாம் ஜூன் 2ஆம், 3ஆம் திகதிகளில் மட்டக்களப்பு சச்துரு கொண்டான் சர்வோதய பண்ணையில் நடைபெறவுள்ளது.

சர்வோதயத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் சாரணர்களுக்கான உணவு, இருப்பிட வசதி உட்பட சகல ஒழுங்குகளையும் சர்வோதயம் மேற்கொண்டுள்ளது.

மாவட்ட சர்வோதய இணைப்பு அதிகாரி ஜனுப் ஹப்லின் சாம்டின் தலைமையில் இப்பயிற்சி முகாம் நடைபெறும்.

ஆரம்ப வைபவத்தில் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் ஜனுப் ரி. டி. ஹஸன், உடற்கல்வி அதிகாரி திரு. க. அன்றியாஸ், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு இரா. தர்மகுலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

(ந—318)

# விளை. வீரர்கள் பொறுமையாக இருக்க வேண்டும்

## விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதி உரை

சீனக்குடா, மே 31

விளையாட்டுத் துறையில் ஈடுபட்டிருக்கும் வீரர்கள் பொறுமை சாலிகளாக இருக்க வேண்டும். ஏனெனில் விளையாட்டுத் துறையின் இலட்சியங்களில் அதுவும் ஒன்றாகும்.

நாச்சிக்குடா "கோல்டன் ஸ்டார்" விளையாட்டுக் கழகத்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எனவே சுகதேசிகளாகவும், ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நாம் திகழ வேண்டுமெனில் விளையாட்டுக்களில் மிக்க ஆர்வத்தோடு ஈடுபட வேண்டும்.

அரசு விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதன் காரணம் ஆரோக்கியமுள்ள ஒரு சமுதா

## இன்றைய திரைகளில்

### 3—வதுவாரம்!

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

கொன்கோட்
(தெஹிவளை)
10.30, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சாந்தி
(மட்டுநகர்)
2.00, 6.00, 9.30,

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

### 11-வதுவாரம்

ஒருதலை காதலின் விளைவுகளை சித்தரிக்கும் கண்ணீர் காவியம்

லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30

மீபுர
(நீர்கொழும்பு)
6-00, 9-30

நியூ இம்பீரியல்

8.00 சயிட் அன்ட் சவுன்ட்
9.00 பயனிக் வுமன்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 பயனிக் வுமன்
(தொடர்ச்சி)

## 'சிலோன்டிரேடிங்' ஹாக்கியில் வெற்றி

கொழும்பு, ஜூன் 1

வர்த்தக சேவைகளின் "ஏ" டிவிஸன், நொக்கவுட் முறையிலான ஹாக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் "சிலோன் டிரேடிங்" அணி, சி. "இலங்கை டுபாக்கோ" அணியை 6—0 கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

இப்போட்டி சி. சி. சி. மைதானத்தில் நடைபெற்றது.

சிலோன் டிரேடிங் அணிக்கு அனுர தர்மசிரிவர்தன (3), இந்திரகுமார், ஏ. சவுந்தரநாயகம், சரத் சில்வா ஆகியோர் கோல்களைப் போட்டுக் கொடுத்தனர்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக மெக்இன்டயர், சோமசேகரம் ஆகியோர் கடமையாற்றினர். (ந)

## மெய்வல்லுநர் சாம்பியன்கள்

பதுளை, மே. 31

பதுளை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பதுளை தர்மதூதா மகா வித்தியாலயமும், பதுளை மத்திய மகா வித்தியாலயமும் சாம்பியனாகின.

பதுளை விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிகளை கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

ஆண்களுக்கான மேற்பிரிவு போட்டிகளில் பதுளை தர்மதூதா மகா வித்தியாலயமும், பெண்களுக்கான மேற்பிரிவு போட்டிகளில் பதுளை மத்திய மகா வித்தியாலயமும் வெற்றி சூட்டின.

கீழ்ப்பிரிவு போட்டிகளில் ஆண்கள் வெற்றிக் கேடயத்தை பதுளை ஊவா மகா வித்தியாலயமும், பெண்கள் வெற்றிக் கேடயத்தை விஹார மகாதேவி மகா வித்தியாலயமும் சுவீகரித்துக் கொண்டன.

பிரதி கல்வி அமைச்சரும், வியலுவை எம். பி.யுமான திரு. சமரவீர வீரவன்னி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். திருமதி வீரவன்னி பரிசுகளை வழங்கினார். (ந—37)

# மேற்கிந்திய அணி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது

ஸ்வான்சி, மே 31

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற இங்கிலாந்துக்கு விஜயம் செய்துள்ள மேற்கிந்திய அணிக்கும், கிளமோர்கன் பிராந்திய அணிக்கும் இடையே ஸ்வான்சியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணி ஒரு இன்னிங்ஸாலும் 226 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளமோர்கன் அணி 175 ஓட்டங்களையே பெற முடிந்தது.

அலன் ஜோன் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஜோயெல் கார்னர் 19 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய மேற்கிந்திய அணியினர் 6 விக்கட் நட்டத்துக்கு 489 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரெல்ப் ரிச்சர்ட்சன் 111 ஓட்டங்களையும், லெறி கோமஸ் 73 ஓட்டங்களையும், விவியன் ரிச்சர்ட்ஸ் 170 ஓட்டங்களையும், ஓகஸ்டின் லோகி 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் கிளமோர்கன் அணி 88 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

வேகபந்து வீச்சாளர்களான ஜோயெல் கார்ணர் (21 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகள்), மைக்கல் ஹோல்டிங் (27 ஓட்டங்களுக்கு 3 விக்கட்), எல்டின் பெப்டிஸ்ட் (17 ஓட்டங்களுக்கு தன் அணியை குறைந்த ஓட்டங்களுக்கு வெளியேற்ற பெரிதும் உதவினர்.

ஓட்ட விபரம்:—

கிளமோர்கன் — முதல் இன்னிங்ஸ் 175 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ் 88 ஓட்டங்கள்.

மேற்கிந்திய அணி — முதல் இன்னிங்ஸ் 6 விக்கட் நட்டத்துக்கு 489 ஓட்டங்கள். (ந)

நாச்சிக்குடா "கோல்டன் ஸ்டார்" விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய ஜனாப் எம். ஐ. ஏ காதர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜே. சுபைர்தீனின் கிராஅத்துடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாப் காதர்:

ஊக்குவிப்பதன் காரணம ஆரோக்கியமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கேயாகும் எனத் தெரிவித்தார்.

கூட்ட இறுதியில் இந்த ஆண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

நாச்சிக்குடா தைக்கியா மைதானத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. (ந-54)

## நிந்தவூர் கழகம் கிரிக்கெட்டில் வெற்றி

நிந்தவூர், மே 31

நிந்தவூர் விளையாட்டுக் கழக கனிஷ்ட கிரிக்கெட் கோஷ்டிக்கும், சாய்ந்த மருது இலவன் கோல்டன் ஸ்டார் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் நிந்தவூர் கோஷ்டி ஒரு இன்னிங்ஸ் 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.


நிந்தவூர் அல் — அஷ்றக் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய நிந்தவூர் கனிஷ்ட கோஷ்டி 129 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது.

பதிலுக்கு ஆடிய சாய்ந்த மருது கோஷ்டி 41 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது.

போதிய ஓட்டங்களைப் பெருத நிலையில் மீண்டும் ஆடப்பணித்த போது, சகல விக்கட்டுகளையும் 43 ஓட்டங்களில் இழந்தது.

நிந்தவூர் சார்பில் ஹாதிக், அஸ்ஹர், சுபைர் பைஸால், முஸம்மில் ஆகியோரும்.

சாய்ந்தமருது சார்பில் அஸ்மி சனு,ஸாக்கீர் ஆகியோரும் சிறப்பாக விளையாடினர். (ந—217)



அண்மையில் எம். டி. குணசேன மைதானத்தில் நடைபெற்ற கொழும்பு மத்திய வட்டார பாடசாலைகளின் வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் போது இடம்பெற்ற ஒரு சுவாரஸ்யமான கட்டத்தைப் படத்தில் காண்க. (நி*ச)

# றகர் வீரர் விபத்தில் சிக்கி மரணம்

கொழும்பு, ஜூன் 1

இலங்கை றகர் வீரர் ஹியூ பார்ட்ராயன் விபத்தொன்றில் சிக்கி அகால மரணமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி காலி வீதியில் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் அவர் சிக்கினார். அதனால் காயமுற்ற இவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு செவ்வாய்க்கிழமை இவர் மரணமானார்.

முன்னாள் சென் பீட்டர்ஸ் கல்லூரி றகர் தலைவரான இவர் 23 வயது இளைஞராவார்.

ஹவலொக் அணிக்காக றகர் போட்டிகளில் பங்கு பற்றும் இவர் இலங்கை றகர் அணியிலும் இடம் பெற்றவர்.

இவ்வருடம் "அணிக்கு ஏழு பேர்" றகர் போட்டிக்காக ஹொங்கொங் சென்ற இலங்கை அணியிலும் இவர் இடம் பெற்றிருந்தார். (ந)

## "இலவன் ஸ்டார்ஸ்" வெற்றி

சாய்ந்தமருது, மே 31

சாய்ந்தமருது "இலவன் ஸ்டார்" விளையாட்டுக் கழகத்திற்கும், சாய்ந்தமருது "டொல்பில்" விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான 20 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் "இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கல்முனை ஸாஹிறாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய "இலவன் ஸ்டார்" அணி 20 ஓவர்களில் 9 விக்கட் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய "டொல்பில்" அணி 14 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து, 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

"இலவன் ஸ்டார்" அணியின் சார்பில் எஸ். சகுறுதீன், இஸட். ஏ. ஜாபிர் அசீர், ஆரிபின் ஆகியோரும்.

"டொல்பில்" அணியின் சார்பில் எம். ஐ. எம். அஸ்ரப், எம்-எச். எம்- நௌபர், எம்- வை. பசீல் ஆகியோரும் சிறப்பாக விளையாடினர்.

மேற்படி போட்டிக்கு ஏ- இர்ஸாட், எம். வை. ஹாறூன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (ந-281)


நியூ இம்பீரியல்
(மூதூர்)
6-00. 9-30
(நாளை முதல்)
குமரன்
(மன்னார்)
6-00. 9-30
சேகர், ரூபா, ரவிந்தர் உஷா நடித்த
ஒருதலை ராகம் (கலர்)
கதை, வசனம், டைரக்ஷன்: இசை: ராஜேந்தர்


விளம்பரமின்றி வியாபாரமில்லை

## மாவட்ட பாடசாலைகளின் போட்டிகள்

மருதமுனை, மே 31

கல்முனைக் கல்வி மாவட்டப் பாடசாலைகளில் வலைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், எல்லே சுற்றுப் போட்டிகள் இம்மாதம் (ஜூன்) நடைபெறவிருப்பதாக, கல்முனை வட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுக் குழுச் செயலாளர் எம். ஐ. எம். முஸ்தபா தெரிவித்தார்.

மேற்படி சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிடம் இருந்து கோரப்பட்டிருக்கின்றன.

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபமொன்றிற்கமைய நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், கல்முனை மாவட்ட உடற் கல்வி அதிகாரி கே. எல். அபூபக்கர் லெப்பை மேற்கொண்டு வருகின்றார்.

இப்போட்டிகளை அடுத்து, கல்முனை மாவட்டத்தில் உடற் கல்வி வாரம் கொண்டாடப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ந—190)

# தினபதி

வ..ர இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்


சர்வ கட்சி மாநாட்டில் தொடர்ந்து பங்கு கொள்வது அவசியமா? என்பதை ஆராய்ந்து உரிய சந்தர்ப்பத்தில் முடிவெடுக்கும் பொறுப்பை கட்சி சார்பில் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளிடம் விடுவதென்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உயர் அதிகார சபை தீர்மானிக்கின்றது.

இத் தீர்மானம் புதனன்று

## பிரதிநிதிகளின் முடிவுக்கு விட தமிழ் காங்கிரஸ் தீர்மானம்

நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் உயர் அதிகார சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கூட்டத்துக்கு திரு. எஸ். ஆர் கனகநாயகம் தலைமை வகித்தார்.

கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்றது


திரு. ஜிம்மி ராஜரத்தினம், திரு. ரீ. மகேந்திரராஜா. திரு. ஏ. குமாரவேலு, திரு. ஆர். ஈ. ஆனந்தராஜா ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(த—7)

## 2005க்கு முன் சாத்தியமில்லை

இலங்கையில் அணு மின் சக்தி இயந்திர சாதனங்களை 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் பொருத்துவது சாத்தியப்படாது.

எரிசக்தி, மின்சக்தி பதில் அமைச்சர் திரு. பி. தயாரத்ன, அமைச்சரவையில் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில், இப்படித் தெரிவித்தார்.



# 150 தமிழ் அரச ஊழியருக்கு நிவாரணம்

## அமைச்சின் செயலாளர்களை தூதுக்குழு சந்தித்து கோரிக்கை

கொழும்பு, ஜூன் 1

ஜூலை வன் செயல்களை அடுத்து வேலைக்குத் திரும்பாத 150க்கு மேற்பட்ட அரசாங்க, கூட்டுத்தா...

கே. இராஜசிங்கம், செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன், திரு. தனபாலசிங்கம் ஆகியோர் தூதுக் குழுவில் இடம்பெற்ற...

குழுவுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும் —

இக் காரணங்களை மனிதாபிமானத்தோடு ஆராய்ந்து இவர்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் அல்லது ஓய்வூதிய வசதி வழங்கப்பட வேண்டும் என்றும் தூதுக்குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

இவர்களின் பிரச்சினைகளை நன்கு விளங்கிக் கொண்ட இரு அமைச்சு செயலாளர்களும் இந்த ஊழியர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து தருமாறு தூதுக் குழுவினரைக் கேட்டுக் கொண்டனர்.

(த)

மருதானை ஸாகிருக் கல்லூரியின் ஆளுநர் சபை தலைவராகத் தெரிவாகியுள்ள அமைச்சர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்காருக்கு புதனன்று பிரஸ்தாப கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதலாவது படத்தில் ஆளுநர் சபைத் தலைவர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் உரை நிகழ்த்துகிறார். இடமிருந்து வலமாக ஸாகிருக் கல்லூரி அதிபர் திரு. ஆர். ஐ. ரி. அலஸ், டாக்டர் எம். சீ. எம். கலீல், ஆளுநர் சபை செயலாளர் ஜனப் எம். காசிம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இரண்டாவது படத்தில் ஸாகிருக் கல்லூரியின் புதிய 3 மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்து கொண்டு அமைச்சர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் நிலத்தை மண் வெட்டியினால் கொத்துகிறார்.

மூன்றாவது படத்தில் அமைச்சர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார், திரு. ஆர். ஐ. ரி. அலஸ் மற்றும் ஆளுநர் சபை அங்கத்தவர்கள் கபூர் மண்டப மேடைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

(படங்கள்: பத்மசிறி கமகே)

(த—தி)

# இலங்கையிலேயே சிறந்த கல்வி நிலையமாக ஸாஹிரு

## அமைச்சர் பாக்கீர் உறுதி

கொழும்பு, ஜூன் 1

ஸாகிருக் கல்லூரியை இலங்கையிலேயே அதி சிறந்த கல்வி நிலையமாக அதுவும் இஸ்லாமிய நெறி முறையில் செல்லும் கல்வி நிலையமாக மிளிரச் செய்வேன்.

கொழும்பு, ஸாகிருக் கல்லூரியின் புதிய ஆளுநர் சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் இவ்வாறு உறுதியளித்தார்.

புதன் காலை கல்லூரியின் கபூர் மண்டபத்தில் நடைபெற்ற புதிய ஆளுநர் சபையின் பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் பாக்கீர் மாக்கார் மேலும் கூறியதாவது:—

ஸாகிரு தற்போது அடைந்துள்ள வளர்ச்சிக்கு அதன் முன்னோர்கள் ஆற்றிய அளப்பரிய சேவைகளே காரணம் ஆகும்.

ஸாகிருவை அரசாங்கம் ஒரு முறை சுவீகரித்தபோது அதன் பழைய மாணவர்கள் சட்ட ரீதியாக பிரிட்டிஷ் நீதி மன்றம் வரை சென்று, ஸாகிருவின் தனித்துவத்தை நிலைநாட்டி வெற்றி பெற்றதை நாம் மறந்து விடக் கூடாது.

ஸாகிருக் கல்லூரி எவரினதும் தனிப்பட்ட சொத்தல்ல. அது இந்த நாட்டின் முஸ்லிம்கள் அனைவருக்கும் சொந்தமானது ஆகும்.

எனவே இந்த நாட்டு முஸ்லிம்கள் அனைவரும் அதனைத் தனது சொந்தச் சொத்தாகக் கருதி உதவியளித்துப் பாதுகாக்க வேண்டும்.

ஸாகிருவின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த மர்ஹூம் ரீ. பி. ஜாயா நினைவு கூரப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இந்த வைபவம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மர்ஹூம் ஜாயா எனக்கு இதே கல்லூரியில் ஆசிரியராக இருந்ததோடு அரசியல் வழிகாட்டியாகவும் விளங்கினார்.

இவ்வாறு அமைச்சர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் கூறினார்.

(த—8)




அடுத்து வேலைக்குத் திரும் பாத 150க்கு மேற்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவின் தூதுக் குழுவினர் இந்த கோரிக்கையை விடுத்தனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுத் தலைவர் திரு.

தனபாலசிங்கம் ஆகியோர் தூதுக் குழுவில் இடம்பெற்றனர்.

இவர்கள் புனர் வாழ்வு அமைச்சின் செயலாளர், றியர் அட்மிரல் பெரேரா, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. சிறிவர்த்தன ஆகியோரைச் சந்தித்தனர்.

அரசாங்கம் இறுதிக் காலக்கெடு கொடுத்த பின்னரும் வேலைக்கு திரும்ப முடியாததற்கான போதிய காரணங்களுடன் இந்த ஊழியர்கள், இணைப்புக்

தூதுக் குழுவினரைக் கேட்டுக் கொண்டனர். (த)

(படங்கள்: பத்மசிறி கமகே) (த-தி)

துள்ள வளர்ச்சிக்கு அதன் முன்னோர்கள் ஆற்றிய அளப்பரிய

# பிரதமரும் லஃலித்தும் தங்களுக்குரிய பாணியில் பேசி இருக்கிறார்கள்

## கருத்து வேறுபாடு இல்லை என்கிறார் அல்விஸ்

கொழும்பு, ஜூன் 1

பிரதமரின் பேச்சிலும், தேசிய பாதுகாப்பு அமைச்சரின் பேச்சிலும் கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் இருவரும் தங்களுக்குரிய பாணியில் பேசி இருக்கிறார்கள்.

என்னை இதில் மாட்டி விடாதீர்கள். நான் எவரையும் தாக்கிப் பேசுவதில்லை. நான் எப்பொழுதும் சமாதான விரும்பி.

இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அமைச்சரவை தீர்மானங்களை பத்திரிகையாளர்களுக்கு விளக்குகையில் நிருபர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வெளிநாட்டுப் பயணம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? பொதுமக்கள் என்ன சொல்கிறார்கள்?" என அமைச்சர் பத்திரிகையாளர்களைப் பார்த்துக் கேட்டார்.

"பொது மக்கள் இன்று பயங்கரவாதத்தைப் பற்றித் தான் பேசுகிறார்கள்" என ஒரு நிருபர் பதிலளித்தார்.

"ஏன்? அவர்கள் (புலிகள்) கொழும்புக்கு வரப் போகிறார்களா? என நகைச்சுவையாக அமைச்சர் கேட்டார்.

சிரிப்பொலிக்கு மத்தியில் "இந்தியாவுக்குப் பிரதமர் சவால் விட்டிருக்கிறாரே?" என ஒரு நிருபர் குறுக்கிட்டார்.

"இதைப் பற்றி நான் விமர்சிக்க முடியாது; சொல்வதற்கு ஒன்றும் இல்லை" என கூறிய அமைச்சர் "பிரதமரின் பேச்சில் சாரம் இருக்கிறது. அவரது பேச்சின் உச்சக்கட்டம் தான் நாடாளுமன்றத்தில் அவர் பேசியது; அது அவரது பாணி.

"அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் பேச்சும் ஒரு சாரப்பட்டதுதான். பிரதமரின் பேச்சுக்கும் அவரது பேச்சுக்கும் வித்தியாசம் இல்லை" என்றார்.

"இந்தியாவுக்கு ஆத்திரமூட்டக் கூடாது. நமது பிரச்சினைகளை நாமே தீர்க்க வேண்டும்" என அமைச்சர் திரு. லலித் கூறுகிறார்.

"பிரதமரோ ஓடி ஒளிக்காமல் நேரடியாகவே சண்டைக்கு வாருங்கள்" என்கிறார்.

இவ்வளவுதான் வேறுபாடு. கருத்து வேறுபாடுகள் இல்லை. ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இவ்வகையில் தானே கருத்து சொல்லி இருக்கிறார்.

வின்ஸ்டன் சேர்ச்சில் போர்க் களத்தில் உணர்ச்சிகரமாக பேசினார். "கடற்கரைக்குக் கீழே இருந்து போரிடுங்கள்" என முழங்கினார்.

அப்படி முழங்கியதால் வீரர்கள் கடற்கரைக்குக் கீழே இருந்து போரிட்டார்களா? இல்லை. எல்லாம் உணர்ச்சிகரமான பேச்சுகள்தாம்.

இப்படி திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறினார்.

(த-ந)

## களவாடப்பட்ட 174 பாஸ்போர்ட் விவரம்

கொழும்பு, ஜூன் 1

சமீபத்தில் அச்சிடப்பட்ட "எச்" தொடரான 174 பாஸ்போர்ட்டுக்கள் மே 26ஆம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்திலிருந்து களவாடப்பட்டுள்ளன.

இது பற்றி குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் திரு. எம். ஏ. ஜீ. வணிகரத்தின இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவித்திருக்கிறார்.

இந்தப் பாஸ்போர்ட்டுக்கள் எவருக்கும் விநியோகம் செய்யப்படவில்லை. இவை ரத்துச் செய்யப்பட்டவையாகக் கருதப்பட வேண்டும். இந்தப் பாஸ்போர்ட்டுக்களுக்கு விசாக்கள் வழங்கப்படலாகாது என்றும் அவர் அறிவுறுத்தி இருக்கிறார்.

களவாடப்பட்ட பாஸ்போர்ட்டுக்களின் விவரம் வருமாறு:-

எச். 0046850
எச். 0049401 முதல் எச். 0049403 வரை.
எச். 0049405 முதல் எச். 0049450 வரை.
எச். 0049451 முதல் எச். 0049500 வரை.
எச். 0049801 முதல் எச். 0049812 வரை.
எச். 0049814 முதல் எச். 0049828 வரை.
எச். 0049830 முதல் எச். 0049850 வரை.
எச். 0050201 முதல் எச். 0050202 வரை.
எச். 0050205
எச். 0050211 முதல் எச். 0050213 வரை.
எச். 0050215 முதல் எச். 0050216 வரை.
எச். 0050223
எச். 0050225 முதல் எச். 0050227 வரை.
எச். 0050229 முதல் எச். 0050242 வரை.

(த-7)

## சோயா அவல் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 1

சோயா உற்பத்திப் பொருள்களில் ஒன்றான சோயா அவலுக்கு நாட்டில் தற்பொழுது தட்டுப்பாடு நிலவி வருகிறது.

சோயா அவல் வழமையாக விற்கப்படும் கோட்டை கூ. மொ. வி. நிலையம், யூனியன் பிளேஸ் அத்துரு போகசல ஆகியவற்றில் இதனைப் பெற முடியாமல் இருப்பதாக கூறப்படுகிறது.

மாசிக் கருவாட்டுக்குப் பதிலாக சம்பலில் கலப்பதற்கு சோயா அவல் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் திடீர் பருப்பாகவும் இதனை மக்கள் பயன்படுத்துகிறார்கள்.

தற்பொழுது இது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதே தற்காலிக தட்டுப்பாட்டுக்கு காரணம் என்று குண்டசாலையில் உள்ள இதன் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (த)


# ஜீவன்டோன்




எவ்வளவு நல்ல உணவு சாப்பிட்டபோதிலும், பலமின்றி சதை பிடியாமல், எலும்பும் தோலுமாக இருப்பவர்களுக்கு நல்ல எடையையும், பருமனையும் அளிக்கிறது. பசியாதிருப்பவர்களுக்கு சுகமான ஜீரண சக்தியையும், உடல் அசதி, கை, கால், உளைவு, வலிமைக் குறைவு, தலைசுற்றல், இரத்தக் குறைவு, அஜீரணம், வளர்ச்சியில்லாமை, சோர்வு, சக்தியின்மை, இளமை மாறி முதுமையுடன் காட்சியளித்தல், உணர்ச்சியில்லாமை, அதிக இல்லற சுகம், மது அருந்துதல் மூலம் உடல் கெடுதல், உணவு பிடிக்காமை, மலச்சிக்கல், கெட்ட நடத்தையில் உடல் மெலிதல் முதலியவைகளை நீக்கி சிரிய முறையில் தேக சுகத்தையும் உண்டாக்கித் தருகிறது.

விலை 250 கிரும் 45/-, 454 கிரும் ரூ. 81/-.

# லிங்கவான்
## (ஆண்மை சக்தி மாத்திரைகள்)




இளமையின் அதீத வேட்கையினால் துர்நடத்தைகளில் ஈடுபட்டு வாழ்வின் ஜீவனை இழந்து விட்டீர்களா? வீரியமிழந்து நரம்புகள் தளர்ந்து இல்லற சுகம் ஏக்கப் பெருமூச்சாகி விட்டதா? துரித நிவாரணத்திற்கு ஆண்மைச் சக்தி மாத்திரைகளைப் பாவியுங்கள்.

விலை:- 1 டின் ரூ. 36/-

முன் பணமாக 3/50 முத்திரை அனுப்பினால் மாத்திரம் வி. பி. பி மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இலங்கையில் ஏக இறக்குமதியாளர்கள்:-

நவலட்சுமி பப்ளிகேஷன்ஸ் சிறீலங்கா

இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்:-

ஒக்ஸ்போர்ட் (பிறைவேட்) கம்.
20, பிரைஸ் பிளேஸ், கொழும்பு — 12.

இங்கும் கிடைக்கும்:-

1. சபினஸ், 110, டாம் வீதி, கொழும்பு - 12.
2. சொய்ஸ் பலஸ் 67, மெயின் வீதி, கல்முனை.
3. பர்வின் டிரேடர்ஸ், 116-1/0, குமார வீதி, கொழும்பு - 11.

இதர ஊர்களுக்கும் ஏஜன்டுகள் தேவை.

நி தா உ ல் — இ ஸ் லா ம்

இஸ்லாத்தின் இனிய போதனைகளை, கவர்ச்சிக்க கருத்துக் கருவூலங்களைச் சுமந்து வரும் இஸ்லாமிய இலக்கிய முத்திங்கள் இதழ். இன்றே வாங்கிப் படித்துப் பலன் பெறுங்கள்.
தனிப்பிரதி விலை ரூபாய் 3-00 மட்டுமே. வீ பீ. பீ. & சந்தா கிடையாது. தபாலில் பெற ரூ. 3-50 க்கான காசுக் கட்டளை [M. O.] அனுப்பவும்.

M. Q. BURHANUDDEEN AHMED
28/1, SOYSAKELLE,
NAWALAPITIYA.

# ஏ. கே. கோல்ட் ஹவுஸ்

25-05-1984 முதல்
இல. 79, செட்டியார் தெரு,
கொழும்பு-11ல்

அமைந்துள்ள எமது புதிய குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு இடம்பெயர்ந்துள்ளோம்.



கடந்த காலங்களில் எமக்கு ஆதரவு அளித்த எமது வாடிக்கையாளர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் தரமான அசல் 22 கரட் தங்க நகைகளை அளித்து உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கின்றோம்.

## ஏ. கே. கோல்ட் ஹவுஸ்

இல. 79, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
தொலைபேசி:- 28991 — 33712


தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.


இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613 வெளியிட்ட திகதி 1 ஜூன் 1984.

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1,2 P. O. Box 1613.